தமிழீழ ஆவணக் காப்பகம்

கலை கலாச்சார அரசியல் சமூக ஏடு    பெப்பிரவரி 1991



# எரிமலை

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இப்படி ஓர்புயல்
எப்படி எழுந்தது?
இப்பெரும் எரிமலை
எப்படி வெடித்தது?
கல்லறைகள் கண்மூடிக்
கடுந்தவம் தான் செய்தனவோ....
மெய்யுறையும் நேரத்தில்
இழுத்துவிட்ட பெருமூச்சோ....
இப்படி ஓர்புயல்
எப்படி எழுந்தது?
உதிரத்தை நீராக்கி,
உயிரதனை ஏராக்கி,
உழுதுவிட்டுச் சென்றீரோ...
ஊற்றெடுக்கும் உணர்வுகளை
விதைத்துவிட்டுச் சென்றீரோ...
இப்படி ஓர்பலம்
எப்படி வந்தது ???

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



எரிமலை

கலை கலாச்சார
அரசியல் சமூக ஏடு

பத்தாம் ஆண்டு

பெப்பிரவரி 1991

ஆக்கங்கள்,
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு:

எரிமலை
c/o C.C.T - France
341, Rue des Pyrenees
75020 Paris.
Tel: 43 58 11 42

# விடுதலைப் புலிகளின் சமாதான முயற்சியும்

# ஸ்ரீ லங்கா அரசின் இராணுவத் தீர்வும்.

*ஸ்ரீ லங்கா அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சியைப் (Peace Initiative) புறக்கணித்து, போர் நடவடிக்கைகளை முடுக்கி விட்டு இராணுவ தீர்வு காண முயன்று வருகிறது. கிழக்கில் ஆயுதப் படைகள் நடமாடக் கூடிய பகுதிகளில் நீதி விசாரணையற்ற படுகொலைகளையும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வடக்கில் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சுக்களையும் நடத்தி வருகிறது.*

*தமிழீழ விடுதலைப் புலிகள் 1990, டிசம்பர் 31 ம் திகதி நள்ளிரவில் அமுலுக்கு வரக்கூடியவாறு, ஒருதலைப்பட்சமான காலவரையற்ற யுத்த நிறுத்தத்தை அறிவித்து, சமாதானப் பேச்சுவார்த்தைக்கும் தயாரெனப் பிரகடனப் படுத்தினர். இதற்குப் பதிலாக அரசாங்கம் 7 நாட்கள் தாக்குதல் நடவடிக்கைகளை (Offensive Operations) இடைநிறுத்தி (Suspend) வைப்பதாக அறிவித்ததோடு பல நிபந்தனைகளையும் விதித்தது. அரசாங்கப் பாதுகாப்புப் படைகள் வழமையான ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவர் என்றும் ஆயுதங்களுடனும், சீருடைகளுடனும் காணப்படும் எவர் மீதும் நடவடிக்கை எடுப்பர் என்றும் அறிவித்தது. பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கும் பல நிபந்தனைகளை அரசாங்கம் விதித்து சமாதானத் தீர்வில் தனது அக்கறையின்மையை வெளிப்படுத்தியது. பேச்சுவார்த்தைக்கு முன்னர் ஆயுதங்களை வைத்திருத்தல், பயன்படுத்துதல் தொடர்பாக அறிவிப்பொன்றைச் செய்யவேண்டும் என்று விதித்தது. அதாவது தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பற்றிய பிரச்சனைக்குத் தீர்வு காணாமலேயே ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பாக தீர்மானம் எடுக்கவேண்டும் என்பதாக அந்நிபந்தனை அமைந்திருந்தது.*

*அரசாங்கத்தின் தமிழ் மக்களுக்கெதிரான ஒடுக்குமுறைகளில் இராணுவ, அரசியல் ரீதியாக கூட்டுச் சேர்ந்து (Collaborate) செயற்படும் அடிவருடித் (Quisling) தமிழ்க் குழுக்களையும் பேச்சுவார்த்தையில் இணைத்து, நிரந்தர தீர்வு ஒன்றைக் காணமுடியாதவாறு பேச்சுவார்த்தையைக் குழப்பும் அம்சங்களும், அரசாங்க நிபந்தனைகளில் அடங்கியிருந்தன. விடுதலைப் புலிகளும் தமது தரப்பில், சிங்களக் குடியேற்றம், வடக்கு கிழக்குப் பகுதியில் நிலைகொண்டுள்ள முற்று முழுதான சிங்கள இராணுவம், தேசிய சுய நிர்ணய உரிமை ஆகிய விடயங்கள் குறித்து நியாயமான நிபந்தனைகளைக்கூட விதித்து பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான சந்தர்ப்பத்தை தடை செய்ய விரும்பவில்லை.*

*விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த நாளிலிருந்து ஜனவரி 8 ம் திகதி வரை ஸ்ரீ லங்காவின் ஆயுதப்படைகள் 39 தடவைகள் யுத்தநிறுத்தத்தை மீறியிருந்தன. யுத்தநிறுத்தம் மீறப்பட்டதுமல்லாமல், யுத்தத்தின் போது கடைப்பிடிக்கவேண்டிய சர்வதேச மனிதாபிமான (Humanitarian) சட்டங்களுக்கு எதிராக பொதுமக்கள் மீது தாக்குதல்களும், கொலைகளும் இடம் பெற்றன. ஸ்ரீ லங்கா அரசாங்கமும் பதிலுக்கு யுத்தநிறுத்த மீறல் குற்றச்சாட்டுக்களை விடுதலைப் புலிகள் மீது சுமத்தியது. முழுமையான, நிலைத்து நிற்கக் கூடிய (Full and durable ceasefire) யுத்தநிறுத்தம்*

www.tamileelamarchive.com

ஒன்றைக் கொண்டு வரும் நோக்குடன், இரு பகுதியினராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க திட்டம் ஒன்றை வரையும் பொருட்டு அரசாங்கம் தம்முடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசனையையும் அரசாங்கம் நிராகரித்து.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனே பேச்சுவார்த்தையில் பங்குபற்ற வேண்டும் என்ற இன்னொரு நிபந்தனையையும் மேலதிகமாக விதித்த ஸ்ரீ லங்கா அரசாங்கம், தான் இடைநிறுத்தி வைத்திருந்த தாக்குதல் நடவடிக்கைகளை திரும்ப ஆரம்பிப்பதாக அறிவித்தது. வடபகுதியில் மக்கள் குடியிருப்புகள் மீது காட்டுமிராண்டித்தனமான (Savage) குண்டுகளை வீசி, பொதுமக்களையும், அவர்கள் சொத்துக்கள், வீடுகளையும், கோவில்கள், பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள், கடைகள் ஆகியவற்றையும் திட்டமிட்டு அழிக்கத் தொடங்கியது. காலவரையறை அற்ற யுத்தநிறுத்தத்தை தொடர்ந்து கடைப்பிடிப்பதாகவும், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாகவும் மேலும் இரு தடவைகள் அறிவித்த விடுதலைப் புலிகள், ஆயுதப்படைகளின் பாரிய தாக்குதல் நடவடிக்கைகளுக்கு எதிரான தற்காப்பு நடவடிக்கைகள் (Defensive actions) எடுக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டபோது, தமது ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை ரத்துச் செய்தனர். அரசாங்கம் முழு அளவிலான இராணுவ நடவடிக்கை ஒன்றைச் செய்யப் போவதாகவும், வடபகுதியிலுள்ள 10 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அனைவரும் வெளியேற வேண்டும் என்றும் அரசாங்கம் கட்டளையிட்டது.





விடுதலைப் புலிகள் நீட்டிய ஒலிவ் இலையை நிராகரித்ததன் மூலம் அரசாங்கம் போர் என்ற போர்வையில் தமிழின இனப்படுகொலையை தொடர்ந்து நடத்த எண்ணம் கொண்டுள்ளது என்பதையும், இராணுவ வெற்றி ஒன்றின் மூலம் சிங்கள மேலாதிக்கத்தை தமிழ் மக்கள் மீது ஏற்படுத்த விரும்புகிறது என்பதையும் தெளிவாக வெளிக்காட்டியுள்ளது. விடுதலைப் புலிகள் சமாதானத் தீர்வுக்காக ஏற்படுத்திக் கொடுத்த அரிய சந்தர்ப்பத்தை அரசாங்கம் புறக்கணித்துள்ளது. தமிழீழப் பகுதிகளில், குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் அரசாங்கம் நடத்தும் இனப்படுகொலையை சமாதானத் தீர்வொன்றின் மூலம் தடுத்து நிறுத்த முடியாமல் போனது வேதனைக்குரியதே.

இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்ட உணவு, மருந்து தடைகளும், பஞ்சமும், அல்லலுற்று அழிந்து கொண்டிருக்கும் மக்களுக்குப் போதிய நிவாரணம் வழங்க முடியாமையும், இனப்படுகொலைகளும் தொடர்வதை முற்றுக் கொண்டுவரவேண்டிய தேவை எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது.

இந்தியா மீண்டும் ஈழத்தமிழர் பிரச்சனையில், செயலூக்கமான பாத்திரம் (Action role) ஒன்றை வகிக்க (play) முன்வந்துள்ளது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை பூரணமாக அமுல் படுத்துமாறு ஸ்ரீ லங்கா அரசை வலியுறுத்துவதும், தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளுக்கெதிரான நடவடிக்கைகளும் இதனையே காட்டுகின்றன. இப்பிரச்சனையில் மத்தியஸ்தராக தம்மை ஈடுபடுத்தி நிரந்தரத் தீர்வு காண முன்வரும் நாடுகளோ அல்லது சர்வதேச அமைப்புகளோ ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் குறித்து ஒரு நியாயபூரவமான முடிவினை முதலில் எடுத்தல் வேண்டும்.




www.tamileelamarchive.com

# நடுநிலையா....?

# இது ஒருவகைத் துரோகமே.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முறியடிக்க பல்வேறு விதமான சூழ்ச்சிகளை மேற்கொண்டுவரும் சிறீலங்கா அரசிற்கு தமிழ்த் துரோகக் குழுக்கள் முழுமையான ஒத்துழைப்பினை வழங்கிவருகின்றன. மூர்க்கத்தனமான விமானத் தாக்குதல்களை நடாத்தி மக்களை உளவியல் ரீதியாக பயங்கரத்துக்குள்ளாக் குவதன் மூலம் போராட்டத்தில் நம்பிக்கை இழக்கச் செய்தல், விடுதலைப் புலிகள் தமிழீழ மக்களின் பிரதிநிதிகள் அல்ல என்ற வாதத்தை முன்வைக்கவும், இன்றைய யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல என்று குதர்க்கம் புரியவும், தமிழ்த் துரோகக் குழுக் களுக்கு அரசியல் அந்தஸ்தினைக் கொடுத்தல், இனப் படுகொலை மூலம் தென் தமிழீழ மக்களை சொந்தப் பிரதேசங்களில் இருந்து விரட்டியடித்து தமிழீழம் அமைப்பதற்கு அடிப்படையான எமது பிரதேசங்களை கபளீகரம் செய்தல் போன்றவை உட்பட பல சூழ்ச்சி கள் சிறீலங்கா அரசால் மேற்கொள்ளப்படுகின்றன.

எதிரியின் சூழ்ச்சிகளை முறியடித்து, எமது போராட் டத்தை வெற்றிப் பாதையில் நடத்துவதற்காக உழைக்க வேண்டிய கடமை தமிழீழ மக்கள் ஒவ் வொருவரினதும் முன்னே உள்ளது. பல்வேறு நெருக் கடிகளை எதிர்கொண்டும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை உறுதியாக முன்னெடுத்துச் செல்லும் விடுதலைப் புலிகளின் கரங்களை பலப்படுத்துவதன் மூலம்தான் எதிரியின் இத்தகைய சூழ்ச்சிகளை முறி யடிக்க முடியும். விடுதலைப் புலிகளின் வெற்றியே தமிழீழ மக்களின் வெற்றியாக அமைய முடியும் என் பதையும், விடுதலைப் புலிகள் தோல்வி காண்பார் களாயின் அது முழுத் தமிழினத்துக்குமே தோல்வி யாக அமைந்துவிடும் என்பதையும் நாம் அனைவரும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

நடுநிலைமையா?

இன்றைய நிலையில் எம்மிற் சிலர் தாம் நடுநிலை மையாளர்கள் என்று கூறிக்கொள்கின்றனர். இவர் களது செயற்பாடுகளை நாம் ஆழ்ந்து அவதானிக்கும் போது நடுநிலைமை என்ற முகமூடியணிந்த இவர்க ளது செயற்பாடுகள் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகவே பயன்படுவதை அவதானிக்க முடிகிறது. இவர்களிற் சிலர், தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர் ணய உரிமையின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்லும் விடு தலைப் புலிகளையும், தமிழின படுகொலையினைச் செய்துவரும் சிறீலங்கா அரசினையும், அரசிற்குத் துணை நிற்கும் தமிழ்க் குழுக்களையும் ஒரே தட்டில் வைத்து மதிப்பீடு செய்கின்றனர். எதிரிக்குத் துணை போகும் இவ்வணுகு முறையினையே இவர்கள் நடு நிலைமை என்று கூறிக்கொள்ளுகின்றனர்.

சில "நடுநிலையாளர்கள்" விடுதலைப் புலிகள் அழிக் கப்பட வேண்டுமென்ற கருத்தினைக் கொண்டவர் களாகக் காணப்படுகின்றனர். சிறீலங்கா அரசிற்கு எதிரான செயற்பாடுகளை விட விடுதலைப் புலிக ளுக்கு எதிரான செயற்பாடுகளிலேயே இவர்களது கவனம் மூழ்கியிருக்கும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரச்சாரங்களை நிலைமைகளுக்கு ஏற்ற வாறு இவர்கள் மேற்கொள்கின்றனர். உதாரணமாக, விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு போகும் போது, தமிழீழ விடுதலையின் காவலர்களாக தம்மை இனங்காட்டி விடுதலைப் புலிகள் இனவாதிகளிடம் சரணடைந்துவிட்டார்கள் என்றும், பேச்சுவார்த்தை முறிவடைந்து யுத்தம் நடைபெறும்போது மக்களைப் பற்றி எவ்வித அக்கறையும் இல்லாத விடுதலைப் புலிகளே அனைத்துக்கும் காரணம் என்றும் இவர்க ளது விமர்சனங்கள் அமையும். இவர்களது செயற்பா டுகளுக்குக் காரணம் விடுதலைப் போராட்டம் மீது கொண்ட அக்கறையல்ல. மாறாக விடுதலைப் புலி களைப் பலவீனப்படுத்துவதன் மூலம் தமிழீழப் போராட்டத்தைப் பலவீனப்படுத்துவதே.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



சிறீலங்கா அரசுக்கும், தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைப் போராட்டத்திற்கும் இடையில் நின்று தரகுவேலை பார்க்கும் ஒரு சிலரும் தாம் நடுநிலையாளர்கள் என்று கூறிக்கொள்கிறார்கள். தமிழீழ மக்களின் எதிர்கால நல்வாழ்வுக்கு வழிசமைக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை அரைகுறைத் தீர்வுகள் மூலம் சிதைப்பதற்கு இவர்கள் எடுக்கும் முயற்சிகள் சிறீலங்கா அரசிற்கு துணை போகின்றவையாகவே அமைகின்றன. "சிங்கள பௌத்த இனவாதம் நாம் கேட்பவை அனைத்தையும் தரப்போவதில்லை; சிறீலங்கா அரசு தரக்கூடியதை மட்டும் நாம் கேட்க வேண்டும்." என்ற போதனையும் வெளிவருகின்றது. தமிழ்த் தேசிய நலன்களில் இருந்து விலகிநின்று செயற்படும் இவர்கள், தங்கள் வர்க்க நலன்களைப் பேணிக் கொள்வதற்கான தமது செயற்பாடுகளுக்கு "நடுநிலைமை" என்ற கவசத்தை அணிந்து கொள்கின்றனர்.

ஒருசில "நடுநிலையாளர்கள்", "தாம் எந்த இயக்கத்திற்கும் ஆதரவில்லை; ஆனால் தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவோம்." போன்ற குழப்பமான வாதங்களை முன்வைக்கின்றனர். தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைப் போராட்டம் இன்று விடுதலைப் புலிகளினாலேயே முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. தமிழீழ விடுதலையினை நேசிக்கும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட வேண்டியது அவர்களது வரலாற்றுக் கடமையாகின்றது. இந்நிலையில் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு, எந்த இயக்கத்திற்கும் ஆதரவில்லை என்று கூறுவது அர்த்தமற்ற வாதமாகவேபடுகிறது.

நடுநிலைமையாக இருக்கமுடியுமா?

எந்த ஒரு போராட்டமும் இரு முரண்பட்ட சக்திகளுக்கிடையேதான் நடைபெறுகின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தினைப் பொறுத்தவரை தமிழினப் படுகொலைகளைச் செய்துகொண்டிருக்கும் சிறீலங்கா அரசும் இனப்படுகொலைகளுக்கு துணை நிற்கும் துரோகக் குழுக்களும் ஒரு புறத்திலும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் விடுதலைப் புலிகளும் தமிழீழ மக்களும் மறுபுறத்திலுமாக முரண்பட்ட சக்திகளாக விளங்குகின்றன. இன்னொரு வகையில் கூறுவதாயின், சிங்கள பௌத்த இனவாதத்தின் நலன்களும், தமிழ்த் தேசிய இனத்தின் நலன்களும் முரண்பட்டு நிற்கின்றன.

தமிழீழ விடுதலைப் போராட்டம் பாரிய வளர்ச்சி கண்ட இன்றைய நிலையில், தமிழீழ மக்கள் தமிழ்த் தேசிய இனத்தின் நலன்களை பிரதிபலிப்பவர்களாக இருந்தால், சிங்கள பௌத்த இனவாதத்தின் நலன்களைக் காரணமாகக் காட்டி தமிழ்த் தேசிய இனத்தின் நலன்களை நசுக்க முயற்சிப்பவர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தே ஆகவேண்டும். சிங்கள பௌத்த இனவாதத்திற்கும் தமிழ்த் தேசிய இனத்தின் நலன்களுக்கும் இடையே நாம் நிற்கமுடியாது. நாம் அவ்வாறு நிற்போமாயின் அது எதிரிக்குத் துணைபோகும் நடவடிக்கை என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எனவே இங்கு நடுநிலைமை என்பதற்கு இடமில்லை.

சிங்கள பௌத்த இனவாதம் மட்டுமல்ல, தமிழ்த் தேசிய இனத்தின் நலன்களுக்கு எதிராகச் செயற்படும் எந்தச் சக்திகளையும் எதிர்த்து எமது கரங்கள் உயர்ந்தே ஆகவேண்டும். இந்தவகையில் விடுதலைப் போராட்டத்தில் நடுநிலைமை என்பதற்கே இடமிருக்கப் போவதில்லை.

தமிழ்த் தேசிய இனத்தின் நலன்களை முதன்மைப்படுத்தி நாம் செயற்படும் போது தமிழீழ விடுதலைப் போராட்டத்தினையும், போராட்டத்தினை முன்னெடுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஆதரித்து, போராட்டத்திற்கு பங்களிப்புச் செய்பவர்களாகவே நாம் விளங்கமுடியும்.

எனவே தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நடுநிலைமை என்று கூறிக்கொள்பவர்கள் தமது செயற்பாட்டின் மூலம் எதிரிக்குத் துணைபோகின்றார்கள். ஒருசிலர் இவ்விடயத்தில் தெளிவான பார்வை இல்லாத காரணத்தினால் "நடுநிலைமை" என்று இதுவரை காலமும் கூறியிருக்கலாம். அவர்கள் தங்களது நிலைப்பாட்டின் தவறை உணர்ந்து போராட்டத்தின் பக்கம் தம்மை இணைத்துக்கொள்ள வேண்டும்.


ஆனால், நடுநிலைமை என்று ஒன்று இருக்கமுடியாது என்பதை நன்கு தெரிந்துகொண்டும் போராட்டத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிரான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு "நடுநிலைமை" வேஷம் போடுபவர்கள் மக்கள் முன் அம்பலப்படுத்தப்பட வேண்டியவர்கள். இவர்களின் "நடுநிலைமை" முகமூடி கிழித்தெறியப்பட வேண்டும். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இவர்கள் செய்யும் துரோகம் வெளிக்கொணரப்பட வேண்டும். இதனைச் செய்ய வேண்டியது தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நேசிக்கும் அனைவரது கடமையுமாகும் ■

[redacted]

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்







எங்கள்
பறவைகள்
கூண்டில்
அடைபடா!
என்றும்
பிறன் இடும்
இரையை
அவை தொடா!

வெட்ட
வெளியே
வீடாய்
ஆகலாம்...
பட்டினி
எங்கள்
உணவாய்ப்
போகலாம்...

நெரிக்க
எண்ணாதீர்...
இரும்பினும்
வல்லோம்...
எரிக்க
நினைக்காதீர்
நெருப்பாய்
உள்ளோம்...!

எங்கள்
பறவைகள்
கூண்டில்
அடைபடா!
என்றும்
பிறன் இடும்
இரையை
அவை தொடா!

விடுதலை
மூச்சு
புயலினும்
வலிதே!
அடிமையின்
பாய்ச்சல்
ஒருநொடிப்
பொழுதே!

ஈழச்
சிறைமதில்
இடியப்
பிரிப்போம்...
நீளச்
சிறகுகள்
நிமிர
விரிப்போம்...

எங்கள்
பறவைகள்
கூண்டில்
அடைபடா!
என்றும்
பிறன் இடும்
இரையை
அவை தொடா!

- *கவிஞர் காசியானந்தன்* -

www.tamileelamarchive.com

தமிழக அரசியல்

# பொம்மலாட்டம்



சந்திரசேகர், ராஜீவ் - அதிகாரம்.
(ஆட்டுவிக்கும் கரங்கள்)

மத்திய அரசின் நலனிற்கும், விருப்பிற்கும், அரசியல் சாகசங்களுக்கும், குறிப்பாக இந்திரா காங்கிரஸின் திருப்திக்கும் ஏற்ப வளைந்து கொடுக்கவேண்டிய கட்டாயம் தமிழக அரசிற்கு அதாவது மக்களால் ஜனநாயக பூர்வமாக தேர்ந்தெடுக்கப்படுகின்ற அர சுகளிற்கு இருந்து வந்திருக்கின்றது. தேசிய அளவி லான தனது நலனுக்கு குந்தகமாய் இருக்கின்ற மாநில அரசுகளைக் கலைத்துவிடும் அதிகாரத்தை எந்தக் குறுக்கு வழியிலும் அடைந்துவிடும் திறமையை காங்கிரஸ் தன்னகத்தே கொண்டுள்ளது எனலாம். தமிழக அரசியல் வரலாற்றைப் பொறுத்தவரை இந் திரா காங்கிரசுடன் ஏற்பட்ட கசப்பு, அல்லது தகராறு காரணமாக 1976 ம் ஆண்டு கலைஞர் ஆட்சியும், 1980 ம் ஆண்டு எம். ஜி. ஆர் ஆட்சியும், 1988 ம் ஆண்டு ஜானகி தலைமையிலான அ. தி. மு. க ஆட்சியும், 1991ம் ஆண்டு கலைஞர் ஆட்சியும் கலைக்கப்பட்டுள் ளன. ஒரு கட்சியின் தலைவர்களின் தேவைக்கேற்ப மக்கள் ஆட்சிகள் பறிக்கப்படுகின்ற இத்தகைய நட வடிக்கைகள் இந்திய ஜனநாயக பாரம்பரியத்துக்கு உரித்தான விதியாகவே கருதப்படுகின்றது.

தமிழக அரசிற்கு மட்டுமல்ல, இந்தியாவின் பிற மாநிலங்களின் அரசுகளிற்கும் இதே கையாலாகாத நிலைதான். இதில் மாநில அரசுகளை அதிகார பூர் வமாக கலைத்துவிட சில சோடிக்கப்பட்ட குற்றச் சாட்டுக்களும், பொய்யான ஆதாரங்களும் தயாரிக்கப் படும். பின்னர் ஜனநாயகத்தின் பேரால், சமூக நீதி யின் பேரால், இந்திய ஒருமைப்பாட்டின் பேரால் அவ்வரசுகள் கலைக்கப்படும்.

இதில் வேடிக்கையான அரசியல் என்னவென்றால் தி. மு. க அரசை அ. தி. மு. க வின் துணையுடனும், அ. தி. மு. க அரசை தி. மு. க வின் துணையுடனுமே காங்கிரஸ் கட்சி பறித்தெடுத்துள்ளது என்பதே.

தற்போதைய கலைஞர் ஆட்சியின் பறிப்பும் இந்த வரலாற்று ஓட்டத்தையே சுட்டி நிற்கிறது.

மத்தியில் V. P. சிங்கின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு, கட்சிகளை உடைப்பதற்கு பெயர்போன சந்திர சேக ரின் ஆட்சி ஏற்பட்டது. இதனையடுத்து தமிழகத்தில் ஒருவித பதட்டநிலை தோன்றியதென்பது ராஜிவின் காங்கிரசை வசைபாடிக்கொண்டிருந்த கலைஞரைப் பழிவாங்க ராஜிவ் இதை ஒரு நல்ல சந்தர்ப்பமாகவே பயன்படுத்துவார் என்ற எதிர்பார்ப்பே. கலைஞரின் ஆட்சி பறிக்கப்படுவதற்கான அறிகுறிகள் ஆரம்பத் திலேயே தென்பட்டன.

இதில் தமிழக எதிர்க்கட்சியான அ. தி. மு. க, தமிழக இந்திரா காங்கிரஸ் என்பன கலைஞரின் ஆட்சியை எப்படியாவது பறித்தெடுத்துவிட வேண்டும் என்று பகீரதப் பிரயத்தனம் செய்தன.

சந்திரசேகரை தனது கைப்பொம்மையாக ஆட்சிக் கதிரையில் அமர்த்தியுள்ள ராஜிவ் காந்தி தமிழகத்தில் தான் சாதிக்க நினைப்பவற்றை "நல்ல பிள்ளை" வேடத்தில் சாதிக்க எண்ணுகின்றார் என்பதை தற் போதைய நிலவரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

கலைஞரின் ஆட்சிக் கலைப்புக்கோரி ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க, தமிழக இந்திரா காங்கிரஸ் என்பன சந்திர சேகரை நெருக்கின. தமி ழக அரசு கலைக்கப்படாவிட்டால் மத்திய அரசிற்கு 11 உறுப்பினர்கள் வாயிலாக தான் வழங்கிவரும் ஆதரவை விலக்கப்போவதாக ஜெயலலிதா மிரட் டினார்; சந்திரசேகர் பணிந்தார்.

விடுதலைப் புலிகளுக்கும், தமிழக அரசிற்கும் இடை யேயுள்ள தொடர்புகள் பயங்கரவாதத்தின் உறவு மு றையாக விமர்ச்சிக்கப்பட்டன. விடுதலைப் புலிகள் தமிழகத்தின் சட்டம் ஒழுங்கை மீறுவதாகவும், தமிழ கம் பயங்கரவாதத்தின் பிடியில் சிக்கிவிட்டதாகவும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





ராமமூர்த்தி

ஆடும் பொம்மைகள்



கருணாநிதி

ஆடும் பொம்மைகள்



ஜெயலலிதா

கூப்பாடு போட்டனர். சீக்கிய, அசாம், காஷ்மீர் தீவிரவாதிகளுடன் விடுதலைப் புலிகள் தொடர்பு கொண்டிருப்பதாயும் விடுதலைப் புலிகள் அவர்களுக்கு பயிற்சியும் ஆயுதமும் வழங்குவதாகவும் அதற்கு தமிழகம் தளமாய் பயன்படுத்தப்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

முன்னர் இந்தியப்படையுடன் விடுதலைப் புலிகள் மோதிக்கொண்டிருந்த கால கட்டத்தில் ஓர் கட்டத்தில் 'மாவீரன் பிரபாகரன் மண்டியிடமாட்டான்" என ஜெயலலிதா கூறுரைத்தார். சிங்களப்படையுடன் யுத்தம் ஆரம்பித்ததன் பின் 'வெறிபிடித்த சிங்களப் படையுடன் மோதிக்கொண்டிருக்கின்ற விடுதலைப் புலிகளுக்கு மத்திய அரசு உதவிசெய்யவேண்டும்' என்று ஜெயலலிதா மத்திய அரசை வலியுறுத்தினார். இதுபோன்று தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழம்பாடி ராமமூர்த்தியும் விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் உதவும்படி கேட்டுக்கொண்டார். இவை V. P. சிங் காலத்தில் நடந்தவை.

அரசியல் சூழ்நிலை மாறியது, சந்திரசேகரின் ஆட்சி மத்தியில் ஏற்பட்ட சந்தர்ப்பத்தை உரியமுறையில் பயன்படுத்த அனைத்துத் தரப்பும் திட்டமிட்டுச் செயல்பட்டது. ஆட்சிக் கலைப்பை மட்டுமே குறியாகக் கொண்டு அனைத்தும் நடந்தேறின. விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கொச்சைப்படுத்தினர். விடுதலைப் புலிகளின் கொலைப் பட்டியலில் தங்களுடைய பெயர்கள் இருப்பதாக ஆளுக்காள் கூப்பாடு போட்டார்கள். ராஜீவின் பத்திரிகைக் காரர்களான சோ, ஜெயகாந்தன் போன்றோர் கூட ஆதாரமற்ற போலியான இந்த பிரச்சாரங்களை மேற்கொண்டனர். விடுதலைப் புலிகளின் தான்தோன்றித்தனமான போக்கிற்கு கலைஞரே பொறுப்பு என குற்றப் பத்திரிகை வாசித்தனர். கலைஞரின் ஆட்சியைக் கலைக்கசத்துள்ள காரணங்கள் வேறு கிடைக்கவில்லை என்பது ஒரு புறமும், விடுதலைப் புலிகள் மீதிருந்த ராஜீவின் வெறுக்கத்தக்க மனப்போக்கும் அநீதியான இந்தப் பொய்ப் பிரச்சாரத்திற்கு வழிகோலின எனலாம்.

முன்னுக்குப்பின் முரண்பாடான கதைகளும், நீதிக்கு முரணான நடைமுறைகளும், துரோகங்களும், காட்டிக்கொடுப்புகளும் பதவிகளுக்காக அரசியல் வாதிகள் புரியும் இத்தகு தகிடுதத்தங்கள் தமிழக மக்களைப் பொறுத்தவரை சாதாரண அரசியல் நடைமுறையாகச் சகித்துக் கொண்டாலும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துகின்ற இத்தகைய நடவடிக்கை தமிழீழ மக்களால் ஜீரணிக்க முடியாத ஒரு வரலாற்றுத் துரோகத் திணிப்பு என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

மத்தியஅரசு தொடுத்த அழுத்தங்கள் தமிழக அரசை நிலைகுலைய வைத்தது. ஆட்சியைக்காப்பாற்ற விடுதலைப் புலிகள் தொடர்பாகக் கடைப்பிடித்து வந்த நடைமுறைகளை மாற்றிக் கொண்ட கலைஞர் விடுதலைப் புலிகளை கைது செய்து சிறையில் அடைத்தார். சிகிச்சை பெற்றுவந்த போராளிகள், இயங்கமுடியாத நிலையில் இருந்த பெண்போராளிகள் உட்பட நூற்றுக்கணக்கான விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்டு கடுமையான சிறையில் அடைக்கப்பட்டனர். விடுதலைப் புலிகள் நடமாடும் பகுதிகள் எனச் சந்தேகிக்கும் பகுதிகள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டன.

இந்த நடவடிக்கைகளின் மூலம் சந்திரசேகருக்கு முரண்டுபிடிக்க விரும்பாத தனது போக்கை கலைஞர் அடையாளம் காட்டினார். இன்னொரு வகையில் பார்த்தால் மத்திய அரசின் கெடுபிடிகளுக்கு முகம் கொடுத்து எதிர்த்து நிற்கின்ற உறுதியை தமிழக அரசு கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகின்றது. இத்தகைய அடங்கிப் போகின்ற தன்மையானது மாநில அரசுகளை தனது கைகளில் தொங்கும் பொம்மைகளாக ஆட்டிவைக்கின்ற மனப்போக்கை மத்திய அரசிற்கு தீவிரமாக ஊட்டியுள்ளது எனலாம். கலைஞர் பணியிருந்த போதும் முன்பே திட்டமிட்டபடி ஆட்சி பறிக்கப்பட்டது எவருக்கும் வியப்பை ஏற்படுத்தவில்லை.

ஆட்சிக்கலைப்பிற்குப் பின்னர் அறிஞர் அண்ணா சிலைக்கு அஞ்சலி செலுத்தத் திரண்ட அ. தி. மு. க தலைவர்கள், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தாம் முழுமையான ஆதரவு வழங்குவோம் என உறுதி எடுத்திருக்கிறார்கள். தமிழக மக்கள் என்றைக்கும் விடுதலைப் புலிகள் பக்கமே இருக்கிறார்கள். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகத் திரண்டு வருகின்ற மக்கள் ஆதரவு இந்திய அரசியல் வாதிகளைப் பொறுத்தவரை பெரும் பயமுறுத்தலாகவே இருந்து வருகிறது. தலைவர் பிரபாகரனின் புகழ் தமிழக மக்களை வெகுவாகக் கவர்ந்துவிட்டது , பட்டிதொட்டிகளில் எல்லாம் பிரபாகரனின் படங்கள். தமிழன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



என்ற சொல்லிற்கான உண்மையான விளக்கத்தை உரைத்த விடுதலைப் புலிகளிற்கு ஆதரவாக இயங்கிவந்த பல சிறுசிறு அமைப்புகள் ஒன்றாக இணைந்து தீவிர பிரச்சாரங்களில் இறங்கியுள்ளன. இளைய பரம்பரை விடுதலைப் புலிகளை தீவிரத்துடன் நேசிக்கின்றார்கள். தமிழகத்தின் இத்தகைய எழுச்சிப் போக்கானது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும். விடுதலைப் புலிகளுக்கும் எதிரான பிரச்சாரங்களுடன் மக்கள் மத்தியில் வர எண்ணும் அரசியல் வாதிகளுக்கு பயத்தைக் கொடுத்திருக்கிறது.

இந்தப் புதிய சூழ்நிலையால் அச்சமுற்ற ஆட்சியாளர்கள் தமிழகத்தில் இராணுவ அடக்குமுறையை திணிக்க முனைந்துள்ளனர். இராணுவம் தமிழகத்திற்கு வரவழைக்கப்பட்டுள்ளது, பொலிசாருக்கு நவீன ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அணுகுமுறையானது தமிழகத்தில் புதிய விவேகமான மாற்றங்களை தோற்றுவிக்கும் என்பது உண்மை.

பிரகாசித்துக் கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகால நிகழ்வுகளை நினைவுபடுத்தும் இத்தகைய இராணுவ, பொலிஸ் கெடுபிடிகளில் சிக்கிக் கொண்டிருக்கும் தமிழகம் அடக்குமுறைகளை முறியடித்து வெற்றிப் பாதையில் பயணப்படும் தமிழீழ விடுதலைப் போராட்டப் படிப்பினைகளைப் பாடமாக்கிக் கொள்ளும் என்பது திண்ணம் ■

## கண்டனம்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் பஞ்சாப், காஷ்மீர், அஸ்ஸாம் தீவிரவாதிகளுக்கும் இடையில் தொடர்பு இருப்பதாகவும் காட்டப்படுகிறது.

இக்குற்றச் சாட்டுகளுக்கு எவ்வித ஆதாரமுமில்லை. தமிழ் நாட்டில், குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களை சுமத்துபவர்களை தமிழக மக்கள் இனங்கண்டு கொள்ளல் வேண்டும்.

எமது நியாயபூர்வமான தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தமிழ்நாட்டு மக்கள் தங்கள் தார்மீக ஆதரவைத் தொடர்ந்தும் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

(தமிழீழ விடுதலைப் புலிகளின் அறிக்கையில் இருந்து...)

"விடுதலைப் புலிகளோடெ கொலைப் பட்டியலில் ஜெயலலிதா, வாழப்பாடி, சோ பேரெல்லாம் இருக்குதுன்னு இந்த மனுசனுவ அவங்க பாட்லெ வெத்துக் கூப்பாடு போடறாங்க. புலிகளுக்கு இந்த எலிகளைப் பத்தியெல்லாம் நினைவே கெடையாது"

வன்னியர் சங்கத் தலைவர் டாக்டர். ராமதாஸ்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திருமாத்தையா அவர்கள் அண்மையில் கிழக்கு மாகாணம் சென்று அங்குள்ள மக்களின் அவலங்களையும், அவர்களின் போராட்ட உணர்வுகளையும் நேரடியாக அறிந்து கொண்டார். அம்மக்களுடன் நாற்பது நாட்கள் தங்கியிருந்து சிங்கள இனவெறியாலும், முஸ்லீம் காடையர்களின் வன்முறைகளாலும் பாதிக்கப்பட்டு சொந்த இடங்களைவிட்டு அகதிகளாக அல்லல்படும் அம்மக்களின் துன்பங்களில் துயரங்களில் பங்கெடுத்துக் கொண்ட திருமாத்தையாவின், கிழக்கு மாகாண பயணத்தில் பங்கெடுத்துக் கொண்ட பத்திரிகையாளர் ஒருவரின் ' உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்.....' என்ற பயணக் கட்டுரையில் இருந்து ஒரு சிறு பகுதியை இங்கு வெளியிடுகின்றோம். சொல்லொணாக் கஷ்டங்களுக்கு மத்தியிலும் போராட்டத்தில் முழுமையாகக் கலந்து நிற்கின்ற தென் தமிழீழ மக்களின் உணர்வுபூர்வமான உண்மைகளைத் தாங்கி வெளிவந்த அந்த நீண்ட கட்டுரையின் முழுப்பகுதியுமே முக்கியமானதாக இருந்தாலும் சில வசதியீனங்கள் காரணமாக கட்டுரையின் சில பகுதிகளை மட்டும் இப்பகுதியில் தொடர்ந்து வெளியிட உத்தேசித்துள்ளோம்.

- ஆசிரியர் குழு -

அந்த மரத்தடியில் சந்தித்த அனைவருடனும் மேலும் சிறிதுநேரம் உரையாடிவிட்டுச் சென்றோம். ஆற்றங் கரையோரமாக சிறிய அடர்ந்த காட்டிற்குள் அமைந் திருந்த முகாமொன்றிற்குச் சென்றோம். கதைகளில் படித்து, ஓவியங்களில் பார்த்திருக்கும் முனிவர்களின் குடிலைப்போன்ற சூழலில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் பிரிவின் தலைமைச் செயலகம் அமைக்கப்பட்டிருந்தது. உள்ளே சென்றோம்.

"உங்களைத்தேடி ஆரோ வந்திருக்கிறாங்க" என்றார் கள் அங்குள்ள போராளிகள். "ஆரது?" என்று கேட் டார் கரிகாலன் "போய்ப்பார்த்தால் விஷயம் விளங் கும்" என்று புன்னகையுடன் கூறினார்கள் அந்தப் போராளிகள் இதில் ஏதோ விஷயம் இருக்கத்தான் செய்யும் என்று என் மூக்குக்கு வியர்த்தது. கரிகாலன் பின்னால் நானும் சென்றேன். அங்கு இரு குழந்தை கள் நின்றார்கள். இருவரும் எட்டு வயதுக்கு உட்பட் டவர்கள். "என்ன மருமக்கள்? என்ன விஷயம்?" என்று கேட்டார் கரிகாலன். "எங்கட அம்மாவை பாக்க வந்தம்" என்றார்கள் "அம்மாவா?" என்றார் கரிகாலன். "ஓ எங்கட அம்மா இயக்கத்துக்கு வந் திட்டா." என்றது பெரிய குழந்தை. அப்போது ஒருவர் வந்தார். "தம்பி என்ட மனிசி இயக்கத்துக்கு வந்திட் டுது; இது ரெண்டும் நம்மட பிள்ளைகள்தான்" என் றார். விழிகளை உயர்த்தி அருகில் இருந்தவர்களைப் பார்த்தார் கரிகாலன்.

"நாம் எவ்வளவோ சொல்லிப்பாத்திட்டம் அவா போறாயில்லை" என்றார்கள் கரிகாலனின் உதவி யாளர்கள். சம்பந்தப்பட்ட பெண்ணைக் கூப்பிட்டார் கரிகாலன். கணவன், மனைவி, பிள்ளைகள், கரிகா லன் அனைவருமாக உரையாடினார்கள். நான் கரி காலனின் அலுவலகத்திற்குள் சென்றுவிட்டேன்.

சிறிது நேரம் செல்ல அவதானித்தேன். தந்தையும் குழந்தைகளும் திரும்பிச்சென்றனர். குழந்தைகளின் முகத்தில் சோகம். தாயை இழந்த குழந்தைகளைப் பார்த்திருக்கிறேன். அதை அனுபவித்திருக்கிறேன். இதை எந்த ரகத்தில் சேர்ப்பது?

கரிகாலன் வந்தார். பின்னால் அந்தத் தாய் வந்தார். அனைவரும் கதிரையில் அமர்ந்தோம். "அக்கா நீங்க ளெல்லாம் குழந்தை குட்டி உள்ளநீங்க எப்படிச் சமாளிப்பீங்க குழந்தைகள் பாவமில்லையா?" அந்தப் பெண்ணைத் திருப்பி அனுப்ப பீடிகை போட்டார் கரிகாலன். "அதெல்லாம் மறுகா பாப்பம். நான் றெயினிங் எடுக்கத்தான் போறன்" என்றார் அந்தப் பெண்மணி "இல்லை, இந்த வயசில..... " என்று இழுத்தார் கரிகாலன். "ஏன் நீங்களெல்லாம் போராடுறபோது இந்த வயசில என்னால போராட முடியாதா?" எதிர்க்கேள்வி போட்டார் அவர். எனக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. வாயைப் பொத்திக்கொண்டு கொஞ்சம் தள்ளிப்போய் சிரித் தேன். காரணம் என்னவென்றால் கரிகாலனுக்கு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



வயது நாற்பது என்பது எனது ஞாபகத்திற்கு வந்து விட்டது. இந்த வயசில போராட முடியாதா என்ற கேள்வி கரிகாலனுக்கும் அவரது வயதை ஞாபகப்படுத்தியிருக்கும்.

மீண்டும் திருப்பி வந்தேன். "இல்லை அது உங்களுக்கு கஷ்டம் என்றவாறே போராட்டத்தில் உள்ள சிரமங்கள், கஷ்டங்கள், கட்டுப்பாடுகள் எல்லாவற்றையும் விளக்கினார் கரிகாலன். கடைசியில் பயிற்சிக்கு வந்த இளம் யுவதிகளைக்காட்டி "இவையளப்போல இளம் ஆக்களெண்டால் தாக்குப்பிடிக்கலாம். உங்களால் ஏலாது எண்டு நான் நினைக்கிறன்" என்றார். அதற்கு அப்பெண் "ஏன் என்னால ஏலாது. இவளுகள் ரெண்டு மரக்கால் நெல்லுக் குத்துவாளுகளெண்டா நான் ஒரு சாக்கு நெல்லு குத்துவன்" என்றார்

அவரது இந்த வார்த்தையில் இருந்து ஒவ்வொருவரின் சிந்தனையும் அவர் அவர்களின் சூழலைப் பொறுத்ததே என்பதை உணர்ந்து கொண்டேன். அதனால்தான் ஒரு சாதாரண குடும்பப் பெண்ணான அவர் தனது ஆற்றலை விளக்க ஒரு சாக்கு நெல்லு தன்னால் குத்த முடியுமென்று சொல்லியிருக்கிறார். கரிகாலனும் எவ்வளவோ சொன்னார், திரும்பிப் போக அப்பெண் மறுத்துவிட்டார். இறுதியில் "சரி" யென்று பயிற்சியெடுக்க அனுமதித்தார் கரிகாலன்.

அன்றைய அனுபவம் எனக்கு புதுமையாக இருந்தது. பிள்ளைகளைத்தேடி பெற்றோர் வருவர். யாழ்ப்பாணத்தில் இயக்கத்துக்குவரும் தங்கள் பிள்ளைகளை எப்பாடுபட்டாவது திருப்பி அழைத்துக்கொண்டு போக பெரும் பிரயத்தனப் படுவார்கள் யாழ்ப்பாணத்து பெற்றோர். இதுவரை அந்தக்காட்சிகளைத் தான் கண்டிருக்கிறேன். அம்மா இயக்கத்துக்கு வந்திட்டா என்று பிள்ளைகள் தேடிவரும் காட்சி: அது மட்டக்களப்பு மண்ணால்தான் முடியும். இயக்கத்திலிருந்து பிள்ளைகளைப் பிரித்தெடுத்து அவர்களின் "நீலக் கடிதங்களுக்காக" காத்திருக்கும் யாழ்ப்பாணப் பெற்றோரிலிருந்து இமயமாக உயர்ந்து நிற்கிறார்கள் பிள்ளைகளை விட்டுவிட்டு இயக்கத்துக்கு வரும் பெற்றோர். அதுவும் தாய்மார்கள் ! ■

### B.B.C தரும் செய்தி.

*யாழ். சென்று திரும்பிய B.B.C நிருபர் கிறிஸ்டோபர் மொறிஸ் கொழும்பில் இருந்து தகவல்*
*( 11.02.1991 அன்று News Desk என்ற நிகழ்ச்சியில் ஒலிபரப்பானது.)*


யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு இரவும் ஒரு மணிநேரம் செய்திகளும், விடுதலைக் கீதங்களும் விடுதலைப் புலிகள் வானொலியினால் ஒலிபெருக்கிகள் மூலம் ஒலிபரப்பப்படுகின்றன. பல மாதங்களாக யாழ்ப்பாணப் பகுதி மின்சாரம் இல்லாமல் இயங்கிவருகின்றது. விடுதலைப் புலிகளிடமும் சில உதவி நிறுவனங்களிடமுமே மின்சாரம் உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் உள்ளன. சாதாரண பொது மக்கள் அத்தியாவசிய சேவைகள் பல இல்லாமலும் ஆகாயத் தாக்குதல்களை எந்த நேரமும் எதிர்பார்த்தபடியே வாழப் பழகிவிட்டார்கள். வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவின் தலைவர் சிறீலங்கா ஆகாயப்படையினால் சேதமாக்கப்பட்ட பல இடங்களை எனக்குக் காண்பித்தார். நெருப்புப் பற்றக்கூடிய திரவகத்துடன் ரப்பர்த் துண்டுகளும் சேர்த்து அடைக்கப்பட்ட பீப்பாக் குண்டுகள் எப்படி Avro விமானங்களில் இருந்து போடப்படுகின்றன என்பதையும், அவை விழுந்து வெடிக்கும் பொழுது எப்படி அந்த ரப்பர்த் துண்டுகள் பட்ட இடங்களிலேயே ஒட்டிப் பிடித்தபடியே எரிந்து கட்டடங்களை சாம்பலாக்கும் என்பதையும் விபரமாக விளக்கிக் கூறினார். குண்டு விழுந்து அழிந்து போயிருந்த பாடசாலையையும் எனக்குக் கூட்டிப்போய் காண்பித்தார். விடுதலைப் புலிகள் பிரகடனம் செய்த யுத்தநிறுத்தத்தை நிராகரித்து நாலு நாட்களாக தொடர்ச்சியாக வல்வெட்டித்துறையில் சிறீலங்கா விமானங்கள் குண்டுமாரி பொழிந்துள்ளன. இது இராணுவம் திட்டமிட்டு, அரசியல் தலைவர்கள் சந்திக்கக்கூடாது எனச் செய்த சதி என்று பலர் கருதுகின்றனர். விடுதலைப் புலிகளின் பேச்சாளர் அன்டன் பாலசிங்கம் 'சிறீலங்கா அரசு யுத்த நிறுத்தத்தையும் பேச்சுவார்த்தையையும் நிராகரித்ததால் சமாதானம் ஏற்படச் சாத்தியக் கூறுகள் அற்றுப்போய் விட்டன. அரசு ஆயுதத் தாக்குதல்களை தொடருமானால் வடக்கிலும் கிழக்கிலும் நீண்டகால யுத்தமொன்று நடைபெறுவதைத் தவிர்க்க முடியாத நிலை ஏற்படும்.' என்று கூறினார். ஆனபடியால் மக்கள் மேலும் கஷ்டங்களை அனுபவிக்க ஆயத்தமாக இருக்கவேண்டும். அநேகமாக எல்லா வீடுகளிலும் பதுங்கு குழிகள் அமைத்திருக்கிறார்கள். சிலர் குழிகளை ஏற்படுத்தி ரெயில்வே சிலிப்பர் கட்டைகளால் மூடியிருக்கிறார்கள். சிலர் பாரிய குழிகளை அமைத்து சீமந்துக் கலவைகளால் நவீன முறையில் கட்டியிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் எப்படியோ வாழ்க்கை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் ஒன்று அங்கேயுள்ள பத்திரிகைக் காரியாலயம் மின்சாரம் இல்லாததால் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றைப் பாவித்து அச்சு இயந்திரங்களை இயக்குகிறார்கள். கையினால் போட்டு எடுத்து மணித்தியாலம் ஒன்றுக்கு ஆயிரம் தாள்களை அச்சடிக்கிறார்கள். இரண்டு தாள்களைக் கொண்டதாக இப்பத்திரிகை பிரசுரமாகிக் கொண்டிருக்கிறது. யுத்தத்தால் களைப்புற்றிருந்தாலும் பொதுமக்கள் களைப்பில் இருந்து மீளும் தன்மை உடையவர்களாகவே காணப்படுகின்றனர். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு பலமாகவே இருக்கின்றது. உற்சாகம் சிறிது குறைந்து காணப்பட்டாலும் மனதில் திடகாத்திரம் கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

ஒரு விடயத்தில் மட்டும் எல்லா மக்களும் ஒரே கருத்தைக் கொண்டுள்ளனர். தங்களுக்கு உதவி மிகவும் அவசரமாக தேவைப்படும் நேரத்தில் சர்வதேச சமுதாயம் அவர்களை கைவிட்டுவிட்டதென்பதே வல்வெட்டித்துறையில் எனக்குக் கூறப்பட்ட கருத்து. 'வியட்நாமில் 35 பேர் கொல்லப்பட்ட பொழுது மேற்கத்திய நாடுகளில் பெரிய ஆரவாரம் செய்தார்கள். தமிழ் பொது மக்கள் ஆயிரக்கணக்கில் கொலை செய்யப்படும் பொழுது ஒருவருடைய சத்தத்தையுமே காணவில்லை. இப்படியான இன ஒழிப்பையும் பொருள் ஒழிப்பையும் செய்து கொண்டிருக்கும் பிரேமதாஸ அரசுக்கு மேற்கத்திய நாடுகளும் உதவி நிறுவனமும் (Aid Consortium) எங்களை அழிப்பதற்கு ஒவ்வொரு வருஷமும் உதவிப் பணத்தொகையைக் கூட்டிக்கொண்டே போகின்றார்கள்.' இதுதான் அவர்களுடைய மனக்கசப்பு. இக்கருத்து நாளடைவில் கூடிக்கொண்டே போகும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






# வளைகுடா யுத்தம்

ஒரு கண்ணோட்டம்

மத்திய கிழக்கில், பாரசீக வளைகுடாவில் பெரும் யுத்தம் நடைபெற்று வருகிறது. கடந்த வருடம் ஆவணி மாதம் ஈராக்கியப் படைகள் குவைத் நாட்டிற்குள் அனுப்பப்பட்டு அச்சிறிய நாடு ஆக்கிரமிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இப்பிரச்சனை அரம்பமாகியது. இது வளைகுடாப் பிரச்சனை என்று அழைப்படுகின்றது. குவைத் அரச குடும்பத்தினால் ஆளப்பட்ட நாடு. மேலும் மத்திய கிழக்கிலுள்ள எண்ணை வளங்களைச் சுரண்டவும் ஏகாதிபத்திய நாடுகள் மத்திய கிழக்கின் மீது தமது ஆதிக்கத்தை நிலைநாட்டவும் வசதியளித்துவந்த நாடுகளில் இதுவும் ஒன்றாகும். குவைத் என்று அழைக்கப்படும் நாடு தற்பொழுது ஈராக்கின் ஒரு பகுதியென்றும் முதலாம் உலகப் போருக்குப்பின்னர் ஓட்டோமான் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து ஏகாதிபத்திய நாடுகள் தங்களது ஆதிக்கத்தையும், நலன்களையும் மத்திய கிழக்கில் பேணும் நோக்குடன் எல்லைகள் பிரிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட புதிய நாடுகளில் குவைத்தும் ஒன்று என ஈராக்கால் கூறப்படுகின்றது. ஆயினும் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வகித்து சர்வதேச சட்டங்களால் அதன் பிரதேச ஒருமைப்பாடும் இறமையும் பாதுகாக்கப்பட்டுவந்த நிலையில் ஈராக்கிய செயல் ஒரு ஆக்கிரமிப்பு என்றே சர்வதேச சமூகத்தால் கணிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையும் அங்குள்ள பாதுகாப்புச் சபையும் இதனை ஆக்கிரமிப்பாக ஏற்றுக்கொண்டு குவைத்தை விட்டு ஈராக்கிய படைகள் வெளியேறுமாறு தீர்மானங்களை நிறைவேற்றின. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புசபையால் 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 12 வது தீர்மான இலக்கம் 678 ஈராக்கியப்படைகள் இவ்வருடம் தை 15ம் திகதிக்குள் குவைத்தைவிட்டு வெளியேற வேண்டும் என்றும், அவ்வாறு வெளியேறாது போனால், பலாத்காரத்தை பிரயோகித்து வெளியேற்ற வேண்டும் என்றும் கூறியது. சர்வதேச சமூகம் என்பது மேற்குலகமே என்றும் ஐக்கிய நாடுகள்சபை ஏகாதிபத்தியங்களின் கைப்பிடியிலுள்ள பொம்மை என்றும் ஈராக்கால் வர்ணிக்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள்சபையின் பாதுகாப்புசபையின் இத்தீர்மானத்தை சர்வதேச அங்கீகாரமாக பாவித்து ஐக்கிய நாடுகள் சபையின் பேரில் ஐக்கிய அமெரிக்காவின் தலைமையில் கூட்டான பல நாடுகள் ஈராக்கிற்கு எதிரான போரில் குதித்துள்ளன. பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற மேற்கு நாடுகளும், சவுதி அரேபியா சிரியா, பாகிஸ்தான், துருக்கி, எகிப்து, பங்களாதேஷ் போன்ற முஸ்லீம் நாடுகளும் கூட்டான போர்முயற்சிகளில் அமெரிக்காவிற்கு உதவிவருகின்றன. இன்னொருபுறம் ஈரான், யோர்தான், லிபியா, அல்ஜீரியா போன்ற மூஸ்லீம் நாடுகள் ஏதோ ஒரு விதத்தில் மறைமுகமாக ஈராக்கிற்கு ஆதரவான நாடுகளாக விளங்குகின்றன. ஐக்கிய நாடுகள் சபையினால் ஈராக்கிற்கு எதிராக கொண்டுவரப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தடை வெற்றியை அளிக்காது போனதாலும் சமாதானப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வுகாணும் முயற்சிகள் தோல்வி கண்டதாலும் போர் ஆரம்பிக்கப்பட்டது. போர் தந்திர உபாயத்தை பொறுத்தவரை விமானத் தாக்குதல் மூலமும், ஏவுகணைத் தாக்குதல் மூலமும் ஈராக்கின் விமானப் படைப்பலம், ஏவுகணைப் பலம் தொலைத் தொடர்பு கட்டளை மையங்கள் ஆகியவற்றின் பெரும் பகுதியை அழித்து ஈராக்கை குவைத்திலிருந்து வெளியேற்றுவதோ! சரணடையச் செய்வதோ நோக்கமாய் உள்ளது. பலவீனத்தை ஏற்படுத்திய பின்னர் தரைச்சண்டையை ஆரம்பிப்பதும் போர்தந்திர உபாயத்தில் ஒரு அம்சமாக உள்ளது. சவுதி அரே

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



பியாவில் நிலைகொண்டுள்ள கூட்டு நாடுகளின் பலலட்சம் படைப்பிரிவுகளை குவைத்துக்குள் அனுப்புவதும் ஈராக்கியப் படைகளோடு பாலைவனத் தரைகளில் மோதுவதும் இரண்டாவது கட்டமாய் இருக்கும். தரைச்சண்டை ஏராளமான உயிரிழப்புக்களை கூட்டுநாடுகளின் படைப்பிரிவிலும் ஏற்படுத்தும். அது போருக்கு எதிரான சூழ்நிலைகளை அந்தந்த நாடுகளில் ஏற்படுத்தும். என்ற காரணத்தினால் தரைச்சண்டையை தவிர்க்கவே கூட்டுநாடுகள் விரும்புகின்றன. ஆயினும் தரைச்சண்டைக்கு கூட்டு நாடுகளை இழுத்துவிட ஈராக் முயல்கிறது. இதே போன்று இஸ்ரேல் நாட்டை சண்டைக்குள் இழுத்துவிட்டு அரபு நாடுகளின் ஒற்றுமையை தனது பக்கபலமாக மாற்ற ஈராக் பல ஏவுகணைகளை இஸ்ரேல் மீது ஏவிக்கொண்டே இருக்கின்றது. ஆயினும் இஸ்ரேல் இச்சண்டையில் கலந்து கொள்ளாது தவிர்த்துக் கொண்டேவருகிறது. இச்சண்டைக்கான அடிப்படையாகா பல்வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றது. இது முஸ்லீம், கிருஸ்தவ சண்டை என்றும் உலகின் வடபகுதிக்கும், தென்பகுதிக்கும் இடையிலான சண்டை என்றும் முதலாம் உலகத்திற்கும் மூன்றாம் உலகத்திற்குமான சண்டை என்றும் அரபு அல்லது முஸ்லீம் அடிப்படை வாதத்திற்கோ அல்லது நவபாசிசத்துவ ஏகாதிபத்திய சுரண்டலுக்கோ எதிரான சண்டை என்றும் வருணிக்கப்படுகின்றது.

ஏகாதிபத்தியங்கள் மத்திய கிழக்கில் எண்ணை வளங்களை நவகாலனித்துவ சுரண்டல் மூலம் தொடர்ந்து அனுபவித்து தமது உலக ஆதிக்கத்தை நிலைநாட்ட விரும்புகின்றன என்றும் கெடுபிடி யுத்த நிலமை (COLD WAR) அமெரிக்காவிற்கு சார்பாக முடிந்து, இருமுகாம் என்ற நிலையிலுள்ள உலகம் நிலமைமாறி அமெரிக்க வல்லரசாக உருவெடுத்து ஒரேமுகாமாக உலகம் மாறிவருகின்றது என்றும் அதற்கெதிராக ஈராக்கால் விடுக்கப்பட்ட சவாலே போர்மூலம் அடக்கப்படுகின்றது என்றும் சில அரசியல் ஆய்வாளர்கள் வர்ணித்துள்ளனர். உலகின் தென்பகுதியிலுள்ளதும், 3 ம் உலக நாடுகளைக் கொண்டதுமான அரபு தேசியமே தற்போதைய அமெரிக்க ஏக வல்லரசு நிலையை எதிர்க்கத் துணிந்த முதல் சக்தியெனவும் அவர்களால் கூறப்படுகிறது.

அதேவேளை ஒன்றுதிரண்ட அரபு தேசியமும், முஸ்லீம் அடிப்படைவாதமும் உலகின் அமைதிக்கும், ஸ்திர நிலைக்கும் மிகப்பெரும் சவாலாக அமையும் என்று ஆய்வாளர்களால் கணக்கிடப்படுகின்றது. இராசாயன, அணுக்குண்டுகளை தம்மகத்தே கொண்டு உருவாகும் அரபு தேசியம் ஈராக்கின் தலைமையில் வளர்ந்து ஏனைய தம் உலகநாடுகளுக்கு பெரும் சவாலாக அமையும் என்றும் கூறப்படுகிறது.







www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



யுத்தம் - வியட்நாம் போர் போன்று தொடர்ந்து நீடித்துச் செல்லாது ஈராக் குவைத்தை விட்டு வெளியேற வேண்டியே ஏற்படும். ஈராக்கிற்கு தொடர்ந்து ஆயுதத்தளபாடங்களை விநியோகிப்ப தற்கு ரஷ்யா முன்வரப் போவதில்லை. ஆயுதம் வழங் கிய இன்னொரு நாடான பிரான்ஸ் எதிராகச் செயற் படுகிறது. இந்த நிலையில் சண்டையை தனித்து நின்றோ, ஏனைய சில அரபுநாடுகளின் உதவியு டனோ வெற்றிபெறும் சாத்தியமில்லை. ஈராக்கிற்கும், அதன் ஜனாதிபதி சதாம் ஹூசேனுக்கும் பாதகமாக சண்டை முடிந்து குவைத் மீண்டும் சுதந்திர நாடாக மாறிய போதிலும், மத்திய கிழக்கில் முன்னிருந்த நிலைமை சண்டையின் பின்னர் இருக்கப் போவ தில்லை.

மத்திய கிழக்கில் அமெரிக்க சார்பு நாடுகளுக்கெதி ரான கிளர்ச்சிகள் வலுப்பெறுவதோடு அரபு தேசி யத்தை அடிப்படையாகக் கொண்ட பிராந்திய வல்ல ரசு அப்பகுதியில் உருவாகுவது தவிர்க்க முடியாதது. ஈராக் பலவீனப்படுத்தப்பட்டு சதாம் ஹூசேன் அப் புறப்படுத்தப்பட்டு அரபு நாடுகள் இரசாயன, அணுக் குண்டுகளைப் பெறுவதைத் தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால்கூட மேற்குலகின் கனவுகள் முழு மையாக பலிக்கப்போவதில்லை. மத்திய கிழக்கில் மட்டுமல்ல, உலகின் தென்பகுதியில் வேறுபல பிராந் திய வல்லரசுகள் வளர்ச்சி பெறுவதும் வரலாற்றுப் போக்காய் அமையும். (Multi Poler) பல்வேறு முகாம் களையும், பல பிராந்திய வல்லரசுகளையும் உடைய உலகம் தவிர்க்க முடியாததாக இருக்கும். அரபு நாடுகளின் பலம் முன்பு போன்றதல்ல, இஸ்ரேலுக்கு மிகமிக அச்சுறுத்தலாக மாறிவருகின்றது என்பதை இப்போர் காட்டுகின்றது. பாலஸ்தீன் பிரச்சனையை உலக நாடுகளால் தீர்க்கப்படுவதையோ, பாலஸ்தீன் நாடு உருவாகுவதையோ இனிமேல் தடுக்க முடி யாது.

ஈராக் குவைத்தை விட்டு வெளியேறும்போது 1967ல் இஸ்ரேலால் கைப்பற்றப்பட்ட பாலஸ்தீனப் பகுதியி லிருந்து இஸ்ரேலும் வெளியேற வேண்டும் என்பது நியாயமான கோரிக்கையாக மேலும் உறுதி பெறும். சகல நாடுகளும் (அமெரிக்கா உட்பட) ஈராக் பிரச் சனை கூர்மையடைந்த இவ்வேளையில், பாலஸ்தீனப் பிரச்சனை தீர்வுகாணப்பட வேண்டும் என்பதையும், சர்வதேச மகாநாடு கூட்டப்பட வேண்டும் என்பதை யும், ஈராக் ஆக்கிரமிப்புப் போன்றதே இஸ்ரேலின் ஆக்கிரமிப்பும் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளன. தொடர்ந்து அடம்பிடிக்கும் இஸ்ரேலைப் பாதுகாக் கும் முயற்சியில், வளர்ந்து உறுதிபெற்று வரும் அரபு தேசியத்தை உடைத்து சீரழிக்கும் அமெரிக்காவின தும், அதனது நேசநாடுகளினதும் முயற்சி தோல்வி யில் முடியலாம் ■

மக்கள் பக்கம்

## இலட்சியம் சாகாது

மாவீரனின் கல்லறைக்குள் அடங்கியது
அவனது உடல் அசைவுகள்தான்
அவனது இலட்சியப் பயணமல்ல

அவனது கல்லறைக்கு அருகில்
மலருகின்ற ரோஜா மலர்
அவன் சிந்திய குருதியை
ஞாபகப்படுத்துகிறது

அவன் வளர்த்த நாய்
அவன் எதிரியைக் கண்டால்
குரைக்கிறது

அவன் அணிந்த சீருடையை
அவன் ஏந்திய ஆயுதத்தை
இன்று எத்தனை பேர் அணிந்து
அவன் பாதையில் தொடர்கிறார்கள்

இன்னும் எத்தனை..
தேசம் மீட்கப் புறப்பட்டவனின்
தேகம்தான் அழிந்தது
அவன் கொண்ட கொள்கையல்ல.

-ஈழமதி-

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# நிழலல்ல நிஜம்

ரோசி

பூமாலை ஆற்ர கையில இருக்கெண்டுறது தான் முக்கியம். திருவாளர் குரங்காரிட்டை எண்டால் நாசம்தானே. அதுமாதிரி சில நல்ல சமாச்சாரங்களும் இடைமட்டங்க ளிட்ட போச்சுதெண்டால் நாறிப் போயிடும். அந்தந்த நாடுகளில போராட்டம், புரட்சியள் நடக்கேக்க போராளியளும், புரட்சியாளர்களும் தங்கட இன்பதுன்பங்களில, தங்கட வேதனை சோதனைகளில, தங்கட உணர்வோட, உயிரோட கலந்து நிற்கிற சகபாடியளைப் பாத்து "தோழர்" எண்டினம். அந்தச் சொல்லுக்கு உயிர்த்துடிப்புள்ள மரியாதை இருந்திச்சு; அதிலை விபரிக்க முடியாத இறுக்கம் இருந்திச்சு. உண்மையில உளசுத்தியான இறுக்கம் இருந்திச்சு. ஆனால் எங்கட சனத்துக்கு "தோழர்" எண்டு கூப்பிட வெட்கமாக்கிடக்கு. ஆரும் அப்பிடிக் கூப்பிட்டாலும் சங்கயீனமாக்கிடக்கு.

ஏனென்டு கேக்கிறியளே; ஆடு மாடு களவெடுத்தவங்களும், நகைநக்கட்ட புடுங்கிறவங்களும், பம்மாத்து அரசியல் நடத்திறவங்களும் தங்கட கூட்டாளியள "தோழர்" எண்டுதானே கூப்பிட்டவங்கள், இப்பவும் கூப்பிடுறாங்கள். உசத்தியான ஒண்ட ஊதாரித்தனமெல்லே பண்ணுறாங்கள். ஆரோ எவனுக்கோ தேவையெண்டதுக்காக எங்கட சனத்தையே கொல்லுற வெறியங்கள் தங்களுக்க தாங்களே "தோழர்" எண்டு வாய் ஒழுகவெல்லே கூப்பிடுறாங்கள். அப்ப "தோழர்" எண்டு கூப்பிட சனத்துக்கு சங்கயீனமாத்தானே இருக்கும்.

இன்னொரு விசயமும் இருக்கு; புருசனை விட்டுட்டு ஓடிப்போய் குமரனைப்பிடிக்கிறவையும், பெண்டில விட்டுட்டுப் பறந்து குமரியைப் பிடிக்கிறவையும் சமூகப்புரட்சி எண்டுகினம். தனிய இருந்து யோசிச்சியள் எண்டால் சிரிப்புத்தான் வரும்; விலா எலும்பு முறிய முறியச் சிரிப்பியள். கவனமாக இருக்கவேணும். துணைக்கு ஆரும் இல்லாத இடங்களில உட்கார்ந்து உந்த விவகாரங்களைப் பற்றி சித்தெறும்பு அளவுதன்னும் சிந்திக்கக் கூடாது; உண்மையில ரொம்ப "கேயர் புள்ளா" இருக்கவேணும்.

சோக்கான விளையாட்டு மாதிரித்தான் பாக்கேக்க தெரியும், ஆனால் அளாப்பல் விளையாட்டு. வீட்டில ஒரு பிரச்சனையும் இருக்காது; குடும்பம் ஒழுங்காத்தான் இருக்கும், புருஷன் நல்ல மனிசன்தான், ஆனால் வயசுதான்......

இதுமாதிரி பொண்டிலுக்கு நோய்நொடி எண்டால் சில கிழட்டுப்பிள்ளையள் மாயமாய் மறைஞ்சிடுவினம். கொஞ்ச நாளைக் குப்பிறகு குமர் ஒண்டோட கைகோத்துக் கொண்டு திரிவினம். இப்பிடியான விசயங்கள் ஒண்டுரெண்டு தான் நடக்குது எண்டாலும் குடுக்கிற விளக்கம்தான் விசம்மாதிரி ஏறுது. சந்தடியில்லாமல் சனத்தைக் கொல்லுற கொடிய நோய்மாதிரி பயமாயிருக்கு.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



இதில அழுகை வருகிற அளாப்பல் என்னெண்டால் தங்கட கலியாணம் புரட்சிக் கலியாணம் எண்டு நியாயம் கற்பிக்கிறதுதான். விசயம் என்னெண்டால் இப்படியான பேர் வழிகள் கொஞ்சம் படிச்சிருப்பினம், நாவன்மை பெற்றவர்களாக இருப்பினம், காகத்தைக் காட்டி கொக்குப் பறக்குது எண்டு "லொஜிக்கலா" நிரூபிக்கிற சுத்து மாத்து கற்றிருப்பினம். இவ்வளவும் காணும் தானே காத்தில கயிறு திரிக்கிறதுக்கு.

உள்ள பிரச்சனை என்னெண்டால் திருப்தியின்மைதான். ஆளுக்காள் திருப்தி பாத்தா..... யோசிச்சுப் பாருங்கோ எங்க போய் முட்டுவம் எண்டு. உலகத்தில உள்ள எந்த ஜீவராசிக்கெண்டாலும் எந்த விசயத்தில திருப்தியிருக்கு? சொல்லுங்கோவன்? இத சம்பந்தப்பட்ட ஆக்கள் நினைச்சுப் பாக்கவேணும். நாளைக்கு வாழப்போற குழந்தை குட்டியளின்ர நிலையை எல்லே யோசிக்கவேணும். அதுகளும் மூளை குழம்பிப்போய் முறைதலை தெரியாமல் தவிக்கப் போகுதுகள். அப்பன் ஆத்தாளின்ர திருப்திக்காக அதுகள் தெருவில நிற்கிறதே?

உந்தச் "சிற்றுவேசன்" ஒருவேளை வெள்ளைக் காரங்களுக்கு பொருந்தும். ஆனால் எங்கட நெஞ்சுகளுக்கு பொறுக்குமே? தங்களுக்கு இல்லாட்டிலும் குஞ்சுகளுக்கு பிரிச்சுக் கொடுத்து சாப்பிட விட்டுட்டு அதப் பாத்து பசி ஆறுறதுதானே எங்கட தாய்மைகள். தங்களை கந்தலுகள், கதருகளால மறைச்சுக்கொண்டு தங்கட செல்வங்களுக்கு புதுசுகளை உடுத்தி சோடிச்சு அழகுபடுத்திப் பாக்கிறதுதானே எங்கட சனங்கள். தங்களை ஒறுத்து, வருத்தி சந்ததியை வாழவைக்கிறது நல்ல குணம்குறிதானே; மிருகசாதியள் மாதிரி நாங்கள் என்னண்டு தற்குறித்தனத்தோட வாழுறது? மிருகசாதியளிலகூட சிலதுகள் நல்ல குணத்தோட இருக்குதுகள்.

தறுதலைத்தனமா எல்லாத்தையும் முடிச்சுக்கொண்டு நெஞ்சு கூசாம நிமிந்து நிண்டுகொண்டு முற்போக்கான, புரட்சிகர செயல் வீரர்களாக தங்களைத் தாங்களே பிரகடனப்படுத்துகினம். எங்கட நாட்டில எத்தனையோ பொம்பிளையள், புருசனை சிங்கள ஆமியிட்ட பறிகொடுத்திட்டு கதிகலங்கி நிற்குதுகள்; சீதனக் கொடுமையால வாழ வழியில்லாமல் எத்தினையோ குமருகள் ஏக்கத்தில தவிக்குதுகள். அதுகளின்ர கண்ணில சிரிப்பு வாறமாதிரி நல்ல காரியங்கள் செய்யுங்கோவன். அப்பிடிச் செய்யிறது மனிசரோட வேலையாயிருக்கும். அதுகள எங்கட சனங்கள் மனசாரப் போற்றுங்கள். அதுகள விட்டுட்டு நல்ல குடும்பங்களப் பிரிச்சு உங்கட மன விகாரத்தை உரசிப்பாக்கிறதுக்கும், இங்க பணத்திமிரில மினுக்கிக் குலுக்கிக்கொண்டு திரியிறதுகளை தள்ளிக்கொண்டு போறதுக்கும் புரட்சி, முற்போக்கு எண்டு மகுடம் சூட்டுறியளே....? சோக்கான பகிடிதான்; உண்மையில ஆத்திரம் வாற பகிடி.

கதைக்கப் பேசத் தெரியாதவன் இப்படியான அநாகரிகத்தைச் செய்திட்டா...

ஆத்தே..... அப்பிடியே அமத்திப்பிடிச்சு ஆள எழும்பேலாமல் பண்ணிப் போடுவியள். கூலிவேலை செய்து கூழ் குடிக்கிறதுகள் உந்த வேலையைச் செய்திட்டா சட்டம் பேசி கூண்டில ஏத்திடுவியள்.

உதெல்லாம் கோட்டும், சூட்டும், நுனிநாக்கு இங்கிலிசும் செய்யிறவேலை. ம்... இன்னும் எத்தினை நாளைக்கெண்டு பாப்பம். ■



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# ஈழத்தமிழர்களின் நலன்களும்



# இந்திய நலன்களும் பின்னிப் பிணைந்ததே

அரசியல் ஆய்வு

கட்டுரைத் தொடர் - 1

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கையானது இந்தியாவின் பிராந்திய எல்லைக்குள் மிகச் சமீபமாக உள்ள ஒரு நாடாக அமைந்து விட்டதால், கடந்த காலங்களிலும், எதிர் காலத்திலும், இந்தியாவினு டைய அரசியல் ஆதிக்கம் இலங்கை மீது இருப்பது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

ஆனால் துரதிஷ்டவசமாக இந்தியாவில் ஓர் அனுபவ மிக்க, அசாத்திய திறமை வாய்ந்த, பரந்த மனப் பான்மையுடைய தலைவரைக் காணமுடியவில்லை. இந்திரா அம்மையாருடைய இழப்புக்குப் பின் இந்தி யாவின் பல் இன மக்களை கட்டியாளக்கூடியவாறு, உயர்ந்த பதவியை வகிப்பதற்கு உரிய பதவி வெற்றி டமாகவே இருக்கின்றது.

இந்திரா அம்மையாருக்குப் பின் வந்த ராஜீவ் காந் தியோ அல்லது அவருக்குப் பின் V.P சிங், சந்திரசேகர் போன்றவர்கள் இந்தியப் பிரதமருக்குரிய பதவியை வகித்தாலும் அவர்கள் பாரத நாட்டை உலக நாட்டு நடப்புகளுடன் எடுத்துச் செல்லக் கூடிய திறமை வாய்ந்த இந்திய தலைமைப் பதவியை வகிக்கவில்லை என்பதையே நிகழ்காலம் எமக்கு உணர்த்தி வருகின் றது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தன்னை ஒரு வல்ல ரசாக நிலைநிறுத்திக் கொண்டிருக்கும் இந்தியா அயல் நாடுகளுடனான ராஜ தந்திர உறவுகளில் மிகச் சரியான போக்கைத்தான் கடைப்பிடித்து வருகின் றதா என்ற கேள்விக்குறி எல்லோர் மனதிலும் எழத் தான் செய்கின்றது.

குறிப்பாக இலங்கைப் பிரச்சனையைப் பொறுத்த வரை சிங்கள அரசபீடம் எப்போதும் இந்திய எதிர்ப்பு உணர்வைக் கொண்டதாகவும் இந்தியாவிற்கு எதி ரான நாடுகளுடனுமே எப்போதும் உறவுகளை வளர்த்து வந்து கொண்டிருந்தது. தற்போதய ஜனா திபதி பிரேமதாசாவும் அதற்கு என்றும் விதிவிலக் கானவர் அல்ல.

## இலங்கைப் பிரச்சனையில் இந்தியாவின் தலையீடு

எப்போதும் இந்திய எதிர்ப்புணர்வைக் கொண்டதும், இந்தியாவினுடைய பிராந்திய நலன்களுக்கு மாறான முறையில் வெளியுறவுகளை வளர்த்தும் வந்த ஸ்ரீ லங்காவின் மீது இந்தியாவின் அழுத்தத்தைப் பிர யோகிக்க ஈழத் தமிழர் பிரச்சனையை இந்தியா கையாண்டது.

பலகாலமாக அடக்கு முறையினாலும், இனப்படு கொலையினாலும், உந்தப்பட்டு வளர்ந்து வந்த தமி ழீழப் போராட்டமானது இந்தியாவினது உதவியால் மேலும் வளரத் தொடங்கியது. தமிழீழப் போராட்டத் தையும் தன்னுடைய எண்ணப்பாட்டிலே கொண்டு நடத்த முற்பட்ட இந்தியாவிற்கு முட்டுக்கட்டையாக தமிழீழத்தில் நம்பிக்கை கொண்ட விடுதலைப் புலி கள் இருக்கவே செய்தார்கள்; ஆனாலும் தன்னுடைய நலனுக்காக ஈழப்பிரச்சனையை வளர்க்க விரும்பிய இந்தியா விடுதலைப் புலிகளின் பலத்தைச் சமப்ப டுத்த ஏனைய இயக்கங்களையும் வளர்த்து விட்டது. ஆனாலும் இந்தியா தமிழீழப் பிரச்சனையை வெறும் பிரிவினை வாதம் எனக்கூறி மறைமுகமாகவும், நேரடியாகவும் பல அழுத்தங்களைப் போட்ட போதும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் எதற்கும் வளைந்து கொடுக்காமற் போகவே இந்தியா இலங்கையுடன் ஒப்பந்தமொன்றை செய்து கொண் டது.

## புலிகளின் விளக்கம்

இந்தியாவினது பிராந்திய நலன்களைப் பொறுத்தவ ரையும், இந்திய நாட்டின் பாதுகாப்பு விடயங்களைப் பொறுத்தவரையும் இந்தியாவுடன் ஒத்துழைக்க தயா ராக இருந்த விடுதலைப் புலிகள் இந்தியாவின் தமி ழீழத்திற்கு எதிரான போக்கை ஏற்றுக்கொள்ள வில்லை.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


அதே வேளை விடுதலைப் புலிகள் இந்திய அதிகாரி களுக்கு பல விடயங்களை எடுத்துக் கூறினர். ஸ்ரீ லங்காவின் முதிர்ந்த இராஜ தந்திரி ஜே. ஆர். ஜெயவர்தனாவினதும், சிங்கள அரசியல் இனவாதிக ளினதும் சூழ்ச்சிகளையும், பௌத்த குருமாரினது அரசியல் அதிகாரத்தைப் பற்றியும், சிங்களவரின் புனித நூலான 'மகாவம்சம்" தொடக்கம் அனைத்து பௌத்த சிங்கள அமைப்புகளும், இந்தியாவிற்கும் தமிழர்களுக்கும் எதிரானவர்களே என்பதையும்:- இப்படியாக நன்கு வளர்கப்பட்டிருக்கும் சிங்கள இனவாதப் பூதம் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை எப்படியும் விழுங்கவே செய்யும் என்பதையும் விடுத லைப் புலிகள் இந்திய அரசிற்கு எடுத்துச் சொல்லவே செய்தனர்.

மேலும் ஒப்பந்தத்தில் தமிழர்களுக்கு கொடுக்கப் பட்டிருக்கும் தீர்வானது இனப்பிரச்சனையின் அடிப் படையில் தீர்க்கப்படவில்லை என்பதையும் தமிழர்க ளின் பிரச்சனைக்கான அடிப்படையான விடயங் களை இவ்வொப்பந்தம் பூர்த்தி செய்யவில்லை 'என் பதையும் தெரியப்படுத்தினர்; ஆனால் துரதிஷ்டவச மாக இந்திய அதிகாரிகள் விடுதலைப் புலிகளின் கருத்தை அசட்டை செய்தனர்.

## இந்திய அரசின் பலவீனம்

பாரத நாட்டை ராஜதந்திர முறையில் நடத்திச் செல்ல சரியான தலைமைகளில்லை. இலங்கைப் பிரச்சனையில் தலையிடத் தொடங்கிய இந்திரா அம்மையார் இடையில் மறைந்து விட்டார். அவரு டைய மறைவை அடுத்து எந்தவித அரசியல் அனுப வமுமற்ற அவருடைய மைந்தர் பதவியை ஏற்றுக் கொண்ட போதும் ராஜதந்திர விடயங்களைப் பொறுத்த வரை வெற்றிடமே இருந்தது. அவருடைய பதவிக் காலத்தில் உட்கட்சிப் பூசல்களால் ராஜதந்திர அதிகாரிகள் அடிக்கடி மாற்றப்பட்டுக் கொண்டிருந் தனர். இலங்கைப் பிரச்சனையை கையாளுவதற்கு காலத்துக் காலம் பலர் நியமிக்கப்பட்டு வந்தனர். இச் செயலானது இந்தியாவிற்கும் தமிழர்களுக்கும் இடைப்பட்ட பிரச்சனையாய் பல விரும்பத்தகாத நிகழ்வுகள் நடைபெறக் காரணமாக இருந்தது. இத் தகைய செயற்பாட்டால் ஈழத்தமிழர் பிரச்சனையைப் பற்றி ஆழமாகவும், அழுத்தத்துடனும் அரசியல், ராஜதந்திர முதிர்ச்சியுடனும் முடிவுகளை எடுக்கக் கூடியவர்கள் இந்திய அரசில் யாரும் இதுவரை இல் லாதமையும் ஈழத்தமிழர் பிரச்சனையில் இந்தியாவி னுடைய போக்கை சரியாக வரையறுக்க முடியாது உள்ளது.

மேலும் இந்தியா தன்னுடைய அரசியல், ராஜதந்திர வறட்சிகளை இந்திய இராணுவம் எனும் மாபெரும் பலத்தைப் பாவித்து நிவர்த்தி செய்ய முயன்றது. இச்செயலானது பிராந்திய சண்டித்தனப் போக் கையே வெளிப்படுத்தியது.





## ஜே. ஆரின் அரசியல் ஆழம்

இந்தியாவினுடைய இத்தகைய பலவீனங்களுடன் ஒப்பிடும் போது ஜே. ஆர். ஜெயவர்தனா ஓர் பழுத்த, முதிர்ச்சி வாய்ந்த ராஜதந்திரியாகவே காணப்பட்டார். தன்னுடைய முதிர்ச்சியை ஜே. ஆரே, ராஜீவ் காந்தி யின் முன்பும் உலகத் தலைவர்கள் முன்பும் வெளிப் படையாக ஒரு முறை கூறியிருந்தார்.

ராஜீவ் காந்தியினுடைய வயதும் தன்னுடைய அரசி யல் அனுபவ காலமும் ஒன்று என்றும் ராஜீவ் காந்தி யினுடைய பூட்டனார் காலத்திலிருந்து இந்திய அரசி யலுடன் தொடர்பு கொண்டு வந்ததாகவும் வெளிப் படையாகவே தெரிவித்துள்ளார்.

இத்தகைய அனுபவம் மிக்க ராஜதந்திரியின் முன் னால் இந்தியாவின் அதிகாரிகளின் சண்டித்தனப் போக்கு செல்லுபடியாகவில்லை. இறுதியில் இந்திய இராணுவத்தையே தமிழ் மக்களுக்கு எதிரான போரில் இறக்கி விட்டது.

அடக்கப்பட்ட மக்களின், அமுக்கப்பட்ட மக்களின் உண்மையான விடுதலை உணர்வு கொண்ட இலட் சியத்திற்கும், வல்லரசுக்கும் நடந்த யுத்தத்தில் வல்ல ரசு பின்வாங்கத்தான் செய்தது. ஆனாலும் அத்துடன் இப்பிரச்சனைகள் முடிவுக்கு வரப் போவதில்லையே.

இன்று ஸ்ரீ லங்கா அரசாங்கம் மீண்டும் தமிழ் மக்கள் மீது போர் நடவடிக்கையை தொடர்ந்து வருகின்றது. ஸ்ரீ லங்காவிற்கு சீன அரசு ஆயுதங்களையும், ஆயுதத் தளபாடங்களையும், நவீன ஜெட் ரக விமானங்க ளையும் வழங்கி வருகின்றது. மேலும் ஸ்ரீ லங்கா அரசிற்கு ராஜதந்திர ரீதியில் வட்டியில்லாக் கடனாக பெருமளவு தொகையை கொடுப்பதாகவும் உறுதிப்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



படுத்தியுள்ளது. இப்படியாக சீனா தன்னுடைய ஸ்ரீ லங்காவுடனான உறவை பல வகைகளிலும் பலப்படுத்தி வர இருந்தது.

அதே வேளை பாகிஸ்தான், ஸ்ரீ லங்காவின் இராணுவ அதிகாரிகளுக்கான பயிற்சிகளை தொடர்ந்தும் செய்து வருகின்றது. இப்படியாக இந்தியாவின் பிராந்திய நலனிற்கு குந்தகமாக இருக்கக்கூடிய வகையில் தொடர்ந்தும் ஸ்ரீ லங்கா தனது உறவுகளைப் பேணி வருகின்றது.

இதேவேளையில் ஸ்ரீ லங்காவின் இனப்பிரச்சனையை சமரசத் தீர்வுகள் மூலம் தீர்த்து வைப்பதற்குப் பல நாடுகளும், பல அமைப்புக்களும் முயன்று வருகின்றன. இந்தியாவும் இம்முயற்சியில் ஈடுபட்டாலும் தற்போது இந்தியாவில் நிலவும் அரசியல் ஸ்திரமற்ற நிலமையின் காரணமாக இந்திய அரசு ஈழத்தமிழர் பிரச்சனையில் ஓர் நிலையற்ற கொள்கையினையே கொண்டிருக்கின்றது.

மேலும் மத்திய அரசில் ஆதிக்கத்தைக் கொண்டிருக்கும் இந்திரா காங்கிரஸ் கட்சியானது தமிழ் நாட்டில் தனது கட்சியை பலப்படுத்தும் முயற்சியை, விடுதலைப் புலிகளைப் பயன்படுத்தி தி. மு. க கட்சியை கவிழ்த்துள்ளது. விடுதலைப் புலிகளுக்கும் அஸாம் தீவிரவாதிகளுக்கும் தொடர்பு இருப்பதாகவும், மேலும் விடுதலைப் புலிகளே இந்தியாவிலுள்ள தீவிரவாதக் குழுக்களுக்கு ஆயுதங்கள் வழங்கி வருவதாகவும் குற்றம் சுமத்தி இதற்கு தமிழ்நாட்டு தி.மு.க அரசு துணைபோவதாகக் கூறியே அவ்வரசைக் கலைத்துள்ளனர். அதேவேளை இந்தியப் பொலிசாரை ஏவி விடுதலைப் புலிகளை தமிழ் நாட்டில் பெருமளவில் கைது செய்தும் வருகின்றனர். போர்க்களத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த பல இளைஞர்கள் இன்று சிறையிலே போடப்பட்டிருக்கின்றனர்.

இந்நிலையைப் பாவித்து சிங்கள அரசு மீண்டும் வட பகுதிமீது பாரிய தாக்குதலை நடத்தி வருகின்றது தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் குழப்ப நிலையையும் வளைகுடா யுத்தத்தில் செய்தி ஸ்தாபனங்களின் கவனம் திரும்பி இருப்பதையும் பாவித்து ஸ்ரீ லங்கா பாரிய அளவில் மீண்டும் தாக்குதலை ஆரம்பித்துள்ளது. இந்தியப் பிரதிநிதி சுக்ளா கொழும்பில் இருந்த போதுதான் தமிழ்நாடு ஆட்சிக் கலைப்பும், அதைத்தொடர்ந்து விடுதலைப் புலிகள் மீதான நடவடிக்கையும் நடைபெற்றிருக்கின்றது. இச்செயலானது தமிழ் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. 87 ம் ஆண்டு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் கே. சி. பந்த் இலங்கையில் இருந்த போதுதான் ஸ்ரீ லங்காவில் விடுதலைப் புலிகளுக்கெதிரான நடவடிக்கை அறிவிக்கப்பட்டது. இச்சம்பவமும் இப்படியான ஓர் தோற்றப்பாட்டையே கொண்டுள்ளது.

இருந்த போதிலும் நாம் இந்தியாவுடனான எமது உறவுகள் பற்றியும், தமிழீழப் போராட்டம் சம்பந்தமாக நாம் இந்தியாவிடமிருந்து எதிர்பார்க்கும் கொள்கைகள் பற்றியும் தொடர்ந்தும் பார்ப்போம் ■

தொடரும்......

**தீர்ப்பு**

வாதம்:- (சில குழப்பவாதிகளால் லண்டனில் வெளியிடப்பட்ட ஒரு வெயியீட்டில், தனது அறிவை வெளிப்படுத்திய ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளர்)

'அப்ப இவங்கள் என்ன செய்துவாங்கள்? என்ன பேசினவங்கள்? அதையாவது சொன்னாலாவது ஓரளவு அரசாங்கத்தின்ர சேட்டை விளங்கும். அதையும் சொல்லாமல் வாயை மூடிக்கொண்டு, சுட்டால்மட்டும் போதுமே. இந்தச் சண்டையுக்க எல்லாருக்கும் எல்லாம் மறந்திட்டுது.'

பிரதிவாதம்:- (அண்மையில் அரியாலை, நாயன்மார்கட்டு பகுதிகளில் தலைவர் பிரபாகரனுடன் உரையாடிய அவ்வூர் மக்கள்.)


'விடுதலைப் புலிகள் எக்காரணத்தைக்கொண்டும் தோல்வியடையக்கூடாது. அதேவேளை, தமிழீழத்தை எந்த நிர்ப்பந்தத்திலும் விட்டுவிடக்கூடாது. சிறீலங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை; ஆனால் விடுதலைப் புலிகள் சமரசத் தீர்வுக்கு முயற்சிக்கும் புதிய அணுகுமுறையை நாம் விளங்கிக் கொள்கின்றோம்.'

தீர்ப்பு:- எங்கட சனங்களுக்கு விளங்கினால் காணும்தானே.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# வாக்குமூலம்

**யுத்த நிறுத்தத்தை எதிர்க்கிறோம்; தமிழ்மக்கள் மீதான இனவெறித் தாக்குதலை ஆதரிக்கிறோம்.**

*"புலிகளது தந்திர வலையில் சிக்காமல், இந்த நாட்டு மக்களை விழிப்போடிருக்கத் தூண்டுவதும், பாசிசத்திடம் இருந்து இந்த நாட்டு மக்களைக் காக்க அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதும் தேசியப் பொறுப்புள்ள அரசியல் கட்சி என்ற வகையில் எமது கடமையாகும். இந்த வரலாற்றுக் கடமையில் இருந்து நாங்கள் பின் வாங்க மாட்டோம்."*

*E.P.D.P செயலாளர் - டக்ளஸ் தேவானந்தா.*
*(தினகரன் - 06.01.1991)*

*"தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தியப் படையினருடனும், இலங்கை இராணுவத்தினருடனும் அடிக்கடி ஏற்படுத்திய யுத்த நிறுத்தங்கள் எதனைச் சாதித்தன என்பதனையும், யாரைப் பலப்படுத்தின என்பதனையும், ஏற்பட்ட விளைவுகள் என்ன என்பதனையும் கடந்தகால யுத்தநிறுத்த வரலாறுகள் சுட்டிக்காட்டத் தவறா."*

*T.E.L.O பாராளுமன்ற உறுப்பினர் - திவ்வியநாதன்.*
*(தினகரன் 06.01.1991)*

*"விடுதலைப் புலிகள் அறிவித்த யுத்தநிறுத்தத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது என P.L.O.T மத்திய குழு வலியுறுத்துகிறது."*

*P.L.O.T அறிக்கை. (வீரகேசரி 13.01.1991)*

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்தமும் பௌத்த சிங்கள அரசின் போர் தொடுப்பும்

தமிழீழ விடுதலைப் புலிகளால் சுயாதீனமான முறையில் காலவரையறையற்ற யுத்தநிறுத்தம் 31.12.1990 நடுநிசியில் இருந்து நடைமுறைக்கு வரக்கூடிய வகையில் அறிவிக்கப்பட்டது.

கொண்டச்சி, கொக்காவில், யாழ் கோட்டை, மாங்குளம் என சிங்கள முகாம்களை தொடர்ச்சியாக வெற்றிகொண்டு, இராணுவரீதியாக மிகவும் பலம்வாய்ந்த நிலையில் இருந்து கொண்டு இந்த யுத்தநிறுத்த அறிவிப்பை ஒரு தலைப்பட்சமான முறையில் விடுதலைப் புலிகள் அறிவித்தனர். விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட போர் நிறுத்தம் தொடர்பான அறிக்கையில் "**யுத்தநிறுத்தத்தை கடைப்பிடிக்கும் எங்கள் ஒருதலைப்பட்சத் தீர்மானமானது, அரசாங்கம் சமாதானத்தைப் பேணப் போகிறதா அல்லது எங்கள் மக்கள் மீது தொடர்ந்து போரை நடத்தப் போகிறதா என்று முடிவெடுக்க வேண்டிய முழுப் பொறுப்பையும் சிறீலங்கா அரசாங்கத்தின் மேல் சுமத்தி விடுகிறது.**" எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், "**சிறீலங்கா அரசாங்கம் யுத்தம் என்ற போர்வையின் கீழ் எமது மக்களுக்கெதிராக இனப்படுகொலை என்ற மாபெரும் குற்றத்தை புரிந்து வருகின்றது. குறிப்பாக கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். ஆயிரக்கணக்காக இந்த மக்கள் காட்டுப் பகுதிகளிலும், அகதி முகாம்களிலும் எந்த விதமான நிவாரணங்களும் அற்று, சொல்லொணாக் கஷ்டங்களுக்கு உட்பட்டு உள்ளனர். யுத்தத்தை காரணம் காட்டி சிறிலங்கா அரசாங்கம் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சென்று பார்வையிடத் தடை செய்துள்ளது. அந்த மக்களின் அவல வாழ்க்கையை உலகின் கவனத்திற்கு கொண்டு வந்து உடனடியான நிவாரணங்களையும், புனர் வாழ்வையும் பெற்றுக் கொடுக்கும் அவசர நோக்கமே நாம் யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிக்கத் தீர்மானம் எடுத்ததற்கு காரணமாகும்.**" என சிறீலங்காவின் இனவெறித் தாக்குதலையும், யுத்தநிறுத்தத்திற்கான காரணத்தையும் தெளிவாக கோடிட்டுக் காட்டியுள்ளனர்

"**தமிழீழத்தில் சமாதானத்தை வளர்ப்பதற்கும், நிலைமையை உருவாக்குவதற்குமான நல்லெண்ண முயற்சியாக, மோதல்களை காலவரையறையின்றி நிறுத்த விடுதலைப் புலிகள் முடிவு செய்துள்ளனர். எமது சமாதான முன்னெடுப்பை ஏற்று யுத்த நிறுத்தத்தை சிறீலங்கா அரசாங்கம் அறிவிக்கத் தவறுவதோடு தொடர்ந்து தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டால், எங்கள் தேசிய விடுதலை இராணுவம், தற்காப்பான ஆயுத நடவடிக்கைகளைச் செய்யும் உரிமை உடையதாய் இருக்கும்.**" என விடுதலைப் புலிகள் தமது நிலையை அவ்வறிக்கையில் ஆணித்தரமாக வலியுறுத்தினர்.

கிழக்கு மாகாண மக்களின் அவலங்களைப் போக்குவதையும், சர்வதேச உதவி நிறுவனங்களின் உதவிகளை கிழக்கு மாகாண மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதையுமே முதன்மை நோக்கமாகக் கொண்டு இந்த யுத்தநிறுத்தத்தை விடுதலைப் புலிகள் அறிவித்த போதும், சர்வதேச அபிப்பிராயத்தை சாதகமாய் திருப்புவதற்கும், சிங்கள அரசின் உண்மையான நோக்கத்தை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்கும் இவ் அரசியல் நகர்வை விடுதலைப் புலிகள் மிக நேர்த்தியாக மேற்கொண்டனர்.

போர் நிறுத்தத்திற்கான எவ்வித அரவமோ, அறிகுறியோ இல்லாத சூழ்நிலையில் விடுதலைப் புலிகளின் இத்திடீர் யுத்தநிறுத்த அறிவிப்பானது, சிங்கள அரசை குழப்பத்தில் ஆழ்த்தியது என்பது வெளிப்படை. சிங்கள மக்களையும், சிங்கள இராணுவத்தையம் தமது சுயலாபத்திற்காக வெறியூட்டி, கொதிக்கும் நிலைக்கு தயார்படுத்திய சிங்கள அரசு இவ்வறிவிப்பிற்கு பதில் வழங்க முடியாமல் தடுமாறியது. யுத்தத்தை தொடர்வதா அல்லது நிறுத்துவதா என்ற குழப்பத்தில் சிங்கள அரசு மூன்று நாட்களைக் கடத்தியது.

தமது நலன்காக்கும் சிங்கள இனவெறிக்கு சாதகமாக

www.tamileelamarchive.com

"அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக போர்தொடுக்கவுமில்லை,தொடுத்ததுமில்லை, தொடுக்கப்போவதுமில்லை. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஏனைய அரசியல் கட்சிகள் அரசாங்கத்தின் மேல் வைத்துள்ள நம்பிக்கையும், தரும் ஆதரவுமே இதற்கு சாட்சி."

வும், அதே வேளை தமது (இராணுவ) நடவடிக்கைகளுக்கு பொருளாதார மற்றும் ஆயுத உதவிகள் புரிந்து வரும் நாடுகளின் அபிப்பிராயங்கள் கெடாமலும் மிகத் தந்திரமாக கையாள வேண்டிய நிலையில் சிங்கள அரசு தவித்தது.

மூன்று தினங்கள் கழித்து 03.01.91 அன்று நிபந்தனைகளுடனான ஏழு நாள் யுத்தநிறுத்தத்திற்கு சிறீலங்கா அரசு இணங்கியது. இது தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கையில் "**தமிழீழத்தில் சகஜ நிலைமையை உருவாக்கும் நோக்குடன் யுத்த நிறுத்தம் கொண்டுவரப் பட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதை நாம் அவதானித்துள்ளோம். சிறீலங்காவின் எந்தப் பகுதியிலும் "தமிழீழம்" என்ற ஒன்று இருப்பதை அரசாங்கம் ஐயந்திரிபற மறுக்கிறது. அரசாங்கம் தனது இறைமையை நாட்டின் எல்லாப் பகுதியிலும் செலுத்தும் என்பதையும், நாட்டின் ஒருமைப் பாட்டிற்கு எதிராக உள்ளிருந்தோ, வெளியிருந்தோ வருகிற ஆக்கிரமிப்பை தொடர்ந்து எதிர்க்கும் என்பதையும் அரசாங்கம் வலியுறுத்த விரும்புகின்றது.**" என தனது அதிருப்தியை வெளியிட்ட சிறீலங்கா அரசு, "**தமிழ் மக்களுக்கு எதிராக சிறீலங்கா அரசாங்கம் இனப்படுகொலை என்ற பாரிய குற்றச் செயலைப் புரிந்து வருவதாகவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அறிக்கை தெரிவிக்கிறது அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராகப் போர்தொடுக்கவுமில்லை, தொடுத்ததுமில்லை, தொடுக்கப் போவதுமில்லை. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய அரசியல் கட்சிகள் அரசாங்கத்தின் மேல் வைத்துள்ள நம்பிக்கையும், தரும் ஆதரவுமே இதற்குச் சாட்சியமாக உள்ளது.** "என தனது அப்பட்டமான இனப்படுகொலை நடவடிக்கையை மறைப்பதற்கு தமிழ்த் துரோகிகளின் ஆதரவை ஆதாரமாக்கிக் கொண்டுள்ளது. "**பாதுகாப்புப் படையினர் இவ் ஏழு நாள் யுத்த நிறுத்த காலகட்டத்தில் வழமையான ரோந்துகளிலும், நிர்வாக நகர்வுகளிலும், சிறீலங்காவின் கடற் பிராந்தியத்தைக் கண்காணிப்பதிலும் ஈடுபடுவர். சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பைப் பேணவும், சிவில் நிர்வாகத்தை சரியாக நடைமுறைப்படுத்தவும், சிறீலங்காவின் பிராந்திய ஒருமைப்பாட்டைக் காக்கவும் இவை அத்தியாவசியமானவை. மோதல்கள் இடை நிறுத்தப்பட்டுள்ள தானது, காத்திரமான முறையில் இக்காலப் பகுதியில் அனுட்டிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் சிறீலங்காவின் ஆயுதப்படைகள், பொலிஸ் உதவிப் படைகள் தவிர்ந்த எவரும் ஆயுதங்களைக் காவிச் செல்லவோ, சீருடைகளை அணிந்திருக்கவோ கூடாது.** "என யதார்த்தத்திற்கு சிறிதேனும் ஒத்துவராத நிபந்தனைகளை சிறீலங்கா அரசு விதித்தது. "**பாதுகாப்புப் படையினர் தமது சொந்தப் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும் உரிமையை வைத்திருப்பர். கடந்த காலங்களில் செய்தது போல, இராணுவ நடவடிக்கை எடுப்பர்.** "இந்த யுத்த நிறுத்த நிபந்தனைகள் ஆனது பாரிய இன ஒடுக்கலுக்கான முஸ்தீபாகவே கருதப்பட்டது. யுத்தத்தை தொடர்வதில் அவர்கள் கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்த அவ்வறிக்கை தொடர்பாக B.B.C செய்தி நிறுவனத்துக்கு கருத்துத் தெரிவித்த விடுதலை புலிகளின் பேச்சாளர், "**இது யுத்த நிறுத்த அறிவிப்பு இல்லை. யுத்தப் பிரகடனம். யுத்த நிறுத்தம் குறித்து அரசு வெளியிட்ட அறிக்கை, யுத்த நிறுத்தத்தை மீறுவதாகவும், மேலும் அரசபடைகள் யுத்த நிறுத்தத்தை மீற வழிவகுப்பதாகவும் அமைகிறது.** "எனக் குற்றம்சாட்டினார். யுத்த நிறுத்தம் ஓர் ஆரோக்கியமான சூழ்நிலையை தோற்றுவித்து பேச்சு வார்த்தைக்கு இட்டுச் செல்லும் என ஊகம் தெரிவித்த அரசு, "**வடக்கு - கிழக்குப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தையில் அனைத்துக் கட்சிகளும் பங்குபற்றும், இத்தகைய பேச்சுவார்த்தைக்கு முன்னர் சட்டத்தால் அதிகாரம் அளிக்கப்பட்டவர்களைத் தவிர்ந்த நபர்களோ அல்லது குழுக்களோ ஆயுதங்கள் வைத்திருப்பது, பாவிப்பதற்கு எதிராக ஒரு பிரகடனம் ஒன்றைச் செய்தல் வேண்டும். இது சுமூகமான பேச்சுவார்த்தைக்கான தகுந்த சூழ்நிலையை உருவாக்கும்.**" என விடுதலைப் புலிகள் ஆணித்தரமாக மறுத்து வருகின்ற நிபந்தனைகளை விதித்து, சமாதான தீர்வுகளுக்கான வழிகளை மறுத்தது.

இந்த நிலையிலும் பரஸ்பரம் யுத்தநிறுத்த மீறல் குற்றச் சாட்டுக்களுடன். தான் அறிவித்த ஏழுநாள் யுத்தநிறுத்த காலத்தைக் கழித்த சிறீலங்கா அரசு தன்னுடன் இணைந்து செயல்படும் தமிழ்க் குழுக்களுடனும், சிங்களக் கட்சிகளுடனும், முப்படைத் தளபதிகளுடனும் கலந்து ஆலோசித்தபின் யுத்தத்தை தொடரப் போவதாக 10.01.91 அன்று அறிவித்தது. "**அரசு அறிவித்த ஏழு நாள் வரையறுப்பு விடுதலைப் புலிகளின் அறிக்கை உண்மையானதுதானா என்று சோதனை செய்வதற்காகவே. பாதுகாப்புப் படைகள் ரோந்து செய்வதும், கண்காணிப்பு வேலைகளில் ஈடுபடுவதும், நாட்டின் சட்டம், ஒழுங்கு முதலியவற்றை நிலை நாட்ட ஒரு அத்தியாவசிய சேவையாகும். சட்டரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசின் கடமையும்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


**கூட. இதைச் செய்யாவிடில் தனது கடமைகளையும் சட்ட ஒழுங்குகளையும் அரசு தாரை வார்த்ததாகக் கருதப்படும்.** " என தனது இராணுவ பயங்கரவாதங்களிற்கு நியாயம் தேடிய அரசு, " **எமது அரசு வடக்கு-கிழக்கில் உள்ள பிரச்சனைக்கு தீர்வு காணவே முனைகிறது. இம்மாதம் 10ம் திகதி வடக்கு- கிழக்கில் வசிக்கும் தமிழ், முஸ்லீம் மக்கள் உட்பட சகல கட்சிகளினதும் கருத்துக்களையும் அறிய சந்தர்ப்பம் கிடைத்தது. இக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அரசு பின்வரும் முடிவுகளை எடுத்துள்ளது:-**

1) **விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த மீறல்களால் இம்மாதம் முடிவுற்ற 7 நாள் யுத்த நிறுத்தத்தை நீடிப்பது இல்லையெனவும்.**

2) **இராணுவப் பிரிவின் தளபதியான திரு.வே. பிரபாகரனை பேச்சுவார்த்தைக்கு அழைப்பதாகவும், அப்பேச்சுவார்த்தைக்கு முன் ஆயுதங்களைக் கைவிட வேண்டுமெனவும், சகல அரசியல் கட்சிகளுடன் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள வேண்டும் எனவும்.**

3) **இந்த நிபந்தனைகளை ஏற்று விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவதாக இருந்தால் அவர்களுக்கு எதிரான தாக்குதல்களை நிறுத்துவதாயும் முடிவுகள் செய்யப்பட்டுள்ளது.** " அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த விடயங்கள் சிறீலங்காவின் உண்மையான நோக்கத்தை தெளிவாக படம்பிடித்தது. சிறீலங்காவினது இந்த யுத்தப் பிரகடனமானது, இராணுவத்தினரின் அழுத்தம் காரணமாக ஏற்பட்டதாக கருதப்படுகின்றது. மழை, மற்றும் காலநிலை காரணமாக விடுதலைப் புலிகளின் பங்கர்கள். நிலைகள் சேதமடைந்துள்ளதாகவும், இந்திய அரசியல் மாற்றத்தால் தமிழகத்தில் விடுதலைப் புலிகள் எதிர் நோக்குகின்ற பிரச்சனைகள், ஆயுத வினியோக நெருக்கடிக்கு உள்ளானதாகவும் கருதிய சிங்கள இராணுவம்; இதன் வெளிப்பாடே விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பு எனக் கருதினர். இந்த நிலையில் விடுதலைப் புலிகளை மிகக் குறுகிய காலத்தில் செயலிழக்கச் செய்து விடலாம் என இராணுவத்தினர் திட்டமிட்டனர்.

இராணுவத்தினரின் கருத்துக்களையும், திட்டங்களையும் நம்பிக்கையுடன் ஏற்றுக்கொண்ட அரசு யுத்தத்தைத் தொடர்வதாக அறிவித்தது. யுத்தநிறுத்த காலங்களில் விடுதலைப் புலிகள் தம்மைப் பலப்படுத்தி தற்போதிருக்கும் நிலையைவிட மிகவும் பலம் பொருந்திய நிலையை எட்டிவிட்டால், வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவ முகாம்களை இலகுவாக தமது பிடிக்குள் கொண்டு வந்து விடுவார்கள் என்ற பீதியும் சில மட்டங்களிலே இருப்பதாகவும் அறியப்படுகிறது.

இராணுவ நடவடிக்கைகள் பெரும் அளவில் ஆரம்பித்தபோதும், மோசமான விமானத் தாக்குதல்கள் தொடர்ந்த போதும் அமைதியைக் கடைப்பிடித்த விடுதலைப் புலிகள் பல தடைவைகள் தாம் தொடர்ந்து போர் நிறுத்தத்தைக் கடைப் பிடிப்பதாக அறிவித்தனர். எனினும் 24.01.1991 இல் விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கையில் தம்மால் மேற்கொள்ளப்பட்ட ஒருதலைப் பட்சமான யுத்தநிறுத்தத்தை ரத்து செய்வதாக அறிவித்தனர். தமிழீழப் பகுதிகளில் தொடரும் மோசமான குண்டு வீச்சுக்களை சுட்டிக்காட்டிய அவ்வறிக்கை, இனப்படுகொலை ஒன்றைச் செய்து தமிழ் மக்களை அடிபணிய வைப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என குறிப்பிட்டது. சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு எதிராக நடப்பதாகவும் சிறீலங்கா அரசாங்கத்தை அவ்வறிக்கை குற்றம் சாட்டியது. சிறீலங்கா அரசாங்கத்தின் இனப்படுகொலை நடவடிக்கைகளில் இருந்து தமிழீழ மக்களை பாதுகாக்கும் பொருட்டு எமது தேசிய இராணுவம் செயற்படும் என அவ்வறிக்கை கூறுகிறது.

சிறீலங்கா அரசின், அரசியல் தீர்வினை உதாசீனப் படுத்துகின்ற இந்தப் போக்கு சர்வதேசத்தின் கண்டனத்தை பெற்றுள்ள அதேவேளை; விடுதலைப் புலிகள் போரில் நாட்டம் கொண்டவர்கள் என்ற தவறான அபிப்பிராயத்தை போக்குவதாகவும் அமைந்துள்ளது. இராணுவ ரீதியாக வெற்றிகளைக் குவித்துவரும் விடுதலைப் புலிகள் இராஜதந்திர ரீதியாக வெற்றியைச் சம்பாதிப்பதிலும் சமத்தர்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் முதல் அறிவித்தல் தொடர்பாக ஒரு கட்டத்தில் கருத்து வெளியிட்ட B.B.C நிருபர் "**விடுதலைப் புலிகள் மிகவும் கைதேர்ந்த தந்திரசாலிகள்.**" எனக் குறிப்பிட்டார். சர்வதேச பத்திரிகையாளர்களினதும், அரசுகளினதும் கண்டனங்களையும், அழுத்தங்களையும் சந்தித்துவரும் சிங்கள அரசு மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியிருக்கிறது என்பதை காலம் விரைவில் உணர்த்தும் ■

www.tamileelamarchive.com



எங்கள் தேசம் அழகிழந்து கிடக்கின்றது;

எங்கள் தேசம் பொலிவிழந்து கிடக்கின்றது;

ஒன்றாய உண்டு, ஒன்றாய் உறங்கி,

இன்பத்தில் துன்பத்தில் சமமாய் பங்கெடுத்து,

எங்கள் உணர்வுகளில் இறுகிக் கிடக்கின்ற

எம் தேசமக்கள்,

எங்கள் உடன்பிறப்புக்கள்,

எங்கள் குழந்தைகள்......

எல்லோரும் அனாதைகள்! அகதிகள்!

எங்கள் மக்களை நோக்கி நீட்டப்பட்டவை யாவும்

ஆக்கிரமிப்புக்கைகள்

கொடூரமான அக்கிரமக் கைகள் மட்டுமே;

எங்கே.... உங்கள் கரங்கள் நேசம் நிறைந்ததா?

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



சிறுகதை

# ஓடியும் கிளைகள்

சேவல் வீட்டுக்கூரையில் நின்று கொக்கரக்கோ; கொக்கரக்கோ, என்று கூவியது. காகங்கள் கா..கா என்று கரைய பொட்டுக்குள்ளால் நுழைந்து பால்கொண்டு வந்த கலா கதவைத்தட்ட "எட மோனே இவ்வளவு நேரமா தூங்கி வழியிறியே! என்று சத்தம் வைத்தார் அவனது தாத்தா. டொக், டொக் என்று மரங்கொத்தி மரம் கொத்துகிறது மாதிரி அவனுக்கு தூக்கத்தில் பாட்டி பாக்கு உரலில் வெற்றிலை பாக்கு இடிக்கிற சத்தம் கேட்டது. அவனின் அக்காவின் மகன் முன் விறாந்தையால ஊர்ந்து கா..! பூ! என்று மழலைச் சொல் தெறித்தபடி அவனின் மார்பில் ஏறி தனது சிறு கையால் அவனின் மூக்கைக் கிள்ளியும் அவன் அசையாது கிடந்தான். அவனின் மார்பிலும் முதுகுக்குக் கீழும் ஈரம்பட்டு திடுக்கிட்டான் கண்ணன். அவன் படுத்திருந்த பனை ஓலை பாய்க்குக் கீழே சலம் வடிந்து சீமெந்து நிலத்தில் தேங்கி நின்றது. அவனின் மருமகப் பிள்ளை கால்களை அகலவிரித்தபடி இருந்துகொண்டு தனது சிறு கையால் தட்டினான். தட்டும்போது பறக்கும் தூமியைக்கண்டு குதூகலித்து மேலும் விரைவாகத் தட்டினான்.

"எணை ஆச்சி இஞ்ச பாரணை உவனை"
"டேய் பேராண்டி என்னடா செஞ்சு வச்சிருக்கிற மாமாவுக்கு" என்று கூறியபடி அவனை வாரியணைத்து இடுப்பில் இடுக்கிக் கொண்டு போனாள் ஆச்சி. இந்த மண்ணின் நினைவுகளுக்கூடே பயணித்தவாறு கண்ணன் தூக்கம் பாதி கலைந்தும் கலையாததுமாக இருக்க அலாரம் கீங்.. கீங் என்று காதுகளை அறுத்தது. அம்புலன்ஸ் வண்டி நோயாளிகளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று கொண்டிருக்கும்போது போட்டுக் கொண்டு போற சத்தம் மாதிரி றூமுக்குள் ஒளி நுழையத் தொடங்கியது காவா பூச்சிகள் சுவரின் துளைக்குள் போய் ஒளிந்துகொண்டன. படை படையாக அவை அந்த சிறிய றூமை ஆக்கிரமித்திருந்தன. அடிக்கிற மருந்துகளை எல்லாம் அவை பொருட்படுத்தவேயில்லை. கண்ணன் வேலைக்குப் போயிட்டானா என்று பார்க்க வந்தமாதிரி சுவர் வெடிப்புகளுக்குள் இருந்து தலையை நீட்டின. வெளியில் தொழுவத்தில் மாடுகளின் குழம்புச் சத்தம் போல சப்பாத்துக் காலடி ஓசைகள் கேட்டுக் கொண்டே இருந்தன. வாகனங்கள் போட்டி போட்டுக் கொண்டு ஓடிக்கொண்டிருந்தன. கண்ணன் நாட்டிலிருந்து வந்ததிலிருந்து றெஸ்ரோறண்ட் ஒன்றில் வேலை செய்யத் தொடங்கியிருந்தான்.

உடல் கொல்லிட குளிர் தழுவியது. பற்கள் கிடுகிடுத்தன. எங்கட தாத்தாட உதறல் அப்படியேதான். ஒருவர் துள்ளித்துள்ளி ஓடினார் டிஸ்கோ அபினயங்கள் போட்டு. ஒருவர் ஓடுவதும் நடப்பதும் சுடுதண்ணி பட்டது மாதிரி. கை, கால் நகங்கள் குற்றியது. அடிபட்ட விரலில் ஏற்படுகிற நகக்குத்துப் போல

குளிர்காற்று வீச மரங்களிலிருந்து தங்க நிறத்தை ஒத்த இலைகள் உதிர்ந்து கொண்டிருந்தன. சூரியன் பனிப்புகார்களை விலக்கிக் கொண்டுவர சிரமப்பட்டான்

வெளியில் இன்றய ஸ்பெஷல் எது என எழுதி விலையும் போடப்பட்டிருந்தது. விளம்பரப் பலகைக்குள்ள சிவப்பு விளக்கு மின்னி மின்னி துலக்கமாகப் பார்க்க உதவியது. உயரமான கண்ணாடிக் கதவை தள்ளித் திறந்து வைத்த போது உள்ளே ஒலித்த ஆங்கிலப்பாடலுக்கு வெளியில் போய்க்கொண்டிருந்த பாதசாரி தலையை ஆட்டிக்கொண்டு போனார்.

கண்ணன் கோப்பைகளை கழுவித்துடைத்து அடுக்கிக் கொண்டிருந்தான். பெரிய அண்டாக்களோடு சண்டை முடிந்து, சிறைக்கதவுகள் மாதிரி அடுப்புகள் எடுத்து வந்து பெரிய இரும்பு பிறஷ் பிடித்து தேய்த்தான். கொழுப்புப் படிவுகள் இலகுவில் போகாது, திமிர் பிடிச்சவனைப் போல. ரி. வியில் பார்த்த விளம்பரம் கண்ணனுக்கு பட்டென்று மின்னியது. அஜெக்ஸ் எடுத்து வந்து ஊற்றி விளக்கினான். கொழுப்புப் போனபாடில்லை. களைப்பாய் இருந்தது. தப்பியோட வேண்டும் போல இருந்தது.

கிறிலில் சில இடங்களில் கொழுப்புப் படிவுகள் இருந்தது கண்டு குசினியருக்கு மூக்கு கோணி இழுத்தது.

www.tamileelamarchive.com

"சவப்பா' என்றார் குசினியர்
கண்ணன் ஒன்றும் பேசாது இரும்பு கிறிலை அடப்புக ளில் வைத்துப் பொருத்தினான்.
"கன்னென்" என்று குசினியர் அழைத்தார்
திரும்பிப் பார்த்து என்ன எனக் கேட்டான்
உருழைக்கிழங்கு ஒரு பெரிய வாளி சீவி வையும். உரு ழைக்கிழங்கெடுக்க வாளியோடு புராணக்கதைகளில் வரும் நரகத்துக்குப்போற படிக்கட்டுகளால் இறங்கி நிலத்துக்கு கீழே உள்ள அறைறையை நோக்கிப் போனான்.
உருழைக்கிழங்கு சீவி பிறித்தாக்கி முடித்துவிட்டு ஒரு கிலோ அளவிலான கிழங்கை எடுத்தான். "தவில் சேப்பில சீவோணும். அது எயிட் குசினியருடைய வேலை". கண்ணன் அலுத்துக் கொண்டான்.

"கண்ணன் என்ன நித்திரையோ! இந்தக் கீரையை காம்பு நீக்கி கழுவி வையும் என்றார் குசினியர்.
சில உருளைக்கிழங்குகளைக் "கூடாது" என்று வீசி னான்
'பசிக்கு என்ன கிடைச்சாலும் வாயில அள்ளிப்போட்டு வயிற்ற நிரப்புறதற்கு எவ்வளவு கஸ்டப்பட்டிருப்பம்.'
கீரைக்காம்புகளை நீக்கியும் பழுத்த, அழுகிய இலை களையும் கூவல் வாளிக்குள் போட்டான்
பெரிய மீன்கள் செதிலடித்து கழுவுவதற்கு தயாராக வந்திருந்தன. 'கசக்கிப் பிழியிறதெண்டே நிக்கிறாங் கள்.'

கண்ணன் ஒரு பலோஞ்சர் ஆனால் இவை எயிட் குசினியருடைய வேலைகள். எயிட் குசினியர் லீவில போனதாலதான் ஒரு மூணு நாளைக்கெண்டு சொலலி இப்ப மூணு வாரம் ஆகுது ஒரு கதையுமில்லை. ஆனா பத்துறோன் இடையில ஒருநாள் கண்ணனைப் பார்த்து 'நாங்கள் ஒரே குடும்பத்தவர்கள்' என்று சொன்னவன் பத்துறோன் அவனோட சேர்ந்து பல வர்ணப் போட்டோ ஒன்றும் எடுத்தவன். கண்ணனுக்கு முகத்தை முறிக்கவும் மனமில்லை. ஆனா முகத்துக்கு அஞ்சி வேசையாடவும் மனமில்லை. கோபமாயிருந் தான்

கீரையைக் கழுவி வைத்துவிட்டு விரைவாகத் தனது வேலைத்தளத்துக்குப் போனான். கோப்பைகள் கோப் பைகளோடு உராசின. கரண்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதி ஒருவித நாதம் எழுந்தது. சில கண்ணாடிக் கோப்பைகள் கையில் வேகம் குறைந்த போது விழுந்து உடைந்தன.

பத்திறோனுக்கு சந்தோஷம். வியாபாரம் நடக்குமாம். பெருவிரலை உசத்திக்காட்டி "நல்லம்" என்றார்.

'இவைக்கு பரிசுக்க கார் ஓடுற மாதிரி வேலை செய்தா பிடிக்காது. சிக்னல் இல்லாத ஓட்டோ றோட்டில ஓடுற மாதிரி வேலை செய்தாத் தான் பிடிக்கும். அதுக்கு குடிச்ச தாய்ப்பால் குளிரில கொஞ்ச நாளைக்குத்தானே நிண்டு பிடிக்கும்.'

றெஸ்ரோறன்டுக்குள் ஒரே குதூகலச் சிரிப்பு, கொஞ் சல். பலத்த சத்தம். குடிக்கிறவன், சாப்பிடிறவன், கொடுக்கிறவன். வாறவன். போறவன் என நிறையப் பேர்கள். பலவித பூ வாசனை. முதலில் இவையெல் லாம் சேர்ந்து முகர்ந்து தலையிடியில திரிஞ்சவன், இப்ப பழகிப் போய்விட்டது. குசினியர் அப்படியே விட் டிட்டு இரண்டு முப்பது மணிபோல புறப்பட்டான். உறுமிக் கொண்டு போனது அவன் கார்.

கண்ணன் குசினியெல்லாம் கூட்டி குப்பைகளை அள் ளிக் கொட்டிவிட்டு குசினியைக் கழுவினான். 'பகல் பூசை முடிஞ்சு இரவுப் பூசைக்கு ஆயத்தமாகிற முரு கன் கோயில் மாதிரி வருஷம் பூராவும் இப்படித்தானே.'

நாலு மணியளவில் தனது றூமை நோக்கிப் போனான். வீட்டில் இருந்து கடிதம் ஏதும் வந்ததா என தபால் பெட்டியை திறந்து பார்த்தான். 'கண்ணீர் சிதறல், மண் படிவுகள், கறைகளை பார்க்கிறவை அழுக்கேறியிருக் கும் கடிதம் எண்டு சொல்லுவினம். எனக்கு அப்படித் தோணல்ல. பதுங்கு குழிக்குள்ள எங்கயோ இருந்து எழுதியிருக்கும் கடிதமது'. அதைப் பிரித்துப் படித்தான் கண்ணன்.

'அட குட்டி மருமகனும் மாமா என்று விளித்து ஒருவரி எழுதிவிட்டுப் போயிருக்கிறான்.' குதூகலித்தது உள்ளம் ஒரு கணம் பெரிய மனக் குமுறல் சமுத்திரம் எழுவது போல எழுந்து அவனுக்குள் மோதி 'ம்' என்ற பெருமச் சாகிப் போனது.

'முன்னையெல்லாம் "மாமா எனக்கு அது வேணும் இது வேணும்" என்று எழுதிகிறவன் இப்ப என்னடா வெண்டா எதுவுமே என்னிட்ட கேட்டு எழுதுகிற தில்லை. என்று கவலைப்பட்டான்

ஆறு மணியாயிற்று. ஊரிலயெண்டா வயல் வெளிகளில கொக்குகளும், குருவிகளும் வெடிச்சத்தம் கேட்டு கலைந்து திக்குத்திக்காய் பறந்து அங்கின உள்ள சிறு காடுகளிலும், குளத்தங் கட்டுகளை அண்டி நிக்கிற செடிகளிலயும் தங்கிக் கொள்ளும். வயல் வேலைகள் முடிஞ்சு அந்த மண்ணை நம்பி வாழும் விவசாயிகள், சிறித அச்சமுற்றிருந்தாலும் நம்பிக்கையோடு தத்தமது வீடுகளை நோக்கிப் போய்க்கொண்டிருப்பினம். மரங்க ளில் ஒளித்துக் கொண்டும், பதுங்கு குழிக்குள் படுத்துக்

www.tamileelamarchive.com

கொண்டும் தெருக்களில் தம்பியவங்கள் புலியாகவும் ஆமியாகவும் மாறி விளையாடிக் கொண்டிருப்பாங்கள். அவன் நாட்டில் இருந்த போது நடந்த நிகழ்வுகளை மீட்டிக் கொண்டு தன் ரெஸ்ரோறன்றை நோக்கி நடந்து கொண்டிருந்தான். பொழுது இன்னும் சாயவில்லை. மாடிக்கட்டிடங்களில் சில சன்னல்கள் திரையிட்டன. சூரிய ஒளிக் குழந்தைகள் உயரிய கண்ணாடி மாடத்தில் தொற்றி விளையாடின. அம்பு போல எலும்புகளையும் உராசி குளிர் காற்று சென்றது. மரங்கள் பசுமை இழந்து கொண்டே போனது.

ரெஸ்ரோறன்றில் பொலித்தீன் சாக்குகளில் கட்டி இருந்த குப்பைகளைத் தூக்கி வெளியில் வைத்தான். அப்படி அவன் தூக்கும் போது இடுப்புக்குள் 'சுளுக்' என்றது. 'அவன் பாட்டி சொல்லிக் கொண்டிருப்பாளே "சதுரக்குத்து, வட்டக்குத்து" என்று, இவனிடம் தான் "அட மோனே! இஞ்சியை கிஞ்சியை தட்டி வென்னியைக் கின்னியை வைச்சுத் தாவன்" எண்டா நிண்டாத் தானே இவன். ஆச்சியின்ர, வருத்தம் தானோ தனக்கு என்று நினைத்தான். கால்கள் உளைந்தன. 'கடினமான வேலையின் தாக்கமோ?.. சேச்சே..... கரும்பனையாட்டமிருந்தவன். வேலைக்கு வந்து சேர்ந்திருந்த காலங்களில் எங்கள் நல்லெண்ணெய் போத்தலில் ஒட்டியிருக்கிற சாண்டோவைப் போல தூக்கிச் செல்வான். இதைப் பார்த்த மறுநாளே அவனுக்கு அங்கு தொடர்ச்சியான வேலை கொடுத்தவன் பத்திறோன்.

இப்ப ஒரு களை. வந்து இரண்டு வருடங்கள்.

'ம்கு வேலைக்களை இல்லை. என்ன களையெண்டு தான் தெரியேல்லை.

எதையோ இழந்து கொண்டு போவது போல் உணர்ந்தான் அட இதுக்க வேற சிகரட்டைப் பற்ற வைக்கிறேனே. இழுத்து இழுத்து விட்டு சுகம் காண்கிறேனே எங்க போய் முடியப் போகுது'

'அட இதை விட்டுத் தொலையடா - முத்து அடிக்கடி சொல்லுகிறவன்.'

'எப்பயெண்டாலும் ஒரு நாளைக்குச் சாகிறதுதானே!'

'அதுக்கு இஞ்சயா?" - முத்து எரிச்சலுடன் கூறுவானே '

ஸ்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்தேன் என்கிற அளவுக்கு நின்றான் கண்ணன்.

'ஊர் ஆஸ்பத்திரி தண்ணி மருந்து மாதிரி சிவப்பு நிறத்தில வைனைக் குடிச்சவாறு சும்மா நிக்கிறானே குசினியர். வெள்ளைத் தப்பிலியர் வெள்ளைச் சேட்டு சாக்கு மாதிரித் துணியில. ஆனா ஆளின்ர மனசு வெளுப்பில்லை. தங்கம் மாதிரி துலங்கணும் நெருப்புக்க நிக்கிற மாதிரிக்கு; அது இல்லை.'

"கன்னென்" கண்ணனைத்தான் கூப்பிட்டான் குசினியர். பிறகும் "கன்னென்"

"இந்தப் பிறிச் எல்லாம் ஐஸ் பிடிச்சிருக்கு அதை உடைத்துக் கழுவிவிடும்."

"ஏன் நீர் செய்யுமென் மார்த்"

"நான் ஷெப்"

"பரவாயில்லை செய்யும்"

"நான் சொன்னா நீர் செய்ய மாட்டீரே"

" அப்படி முடியாது"

"நான் உன்னைக் கவனிக்கிறேன்" என்றான் குசினியர்.

வழக்கத்தை விட ஏராளமான தட்டு முட்டுச் சாமான்கள் கழுவுவதற்கு வந்து சேர்ந்தன. கண்ணன் ஒவ்வொன்றாக எடுத்துக் கழுவினான். சனமோ திருவிழாவிற்கு வாற மாதிரி வந்து சேர்ந்தது. கோப்பைகள் கரண்டிகளுக்கான கேள்வி அதிகரித்தது. கண்ணன் நிண்டு பிடித்தான்.

"தயவு செய்த குசினியருக்கு உதவி செய்யும்" பத்திறோன் கண்ணனிடம் வந்து கேட்டான்.

மறுத்தான் "என்னால் முடியாது" என்றான் கண்ணன்.

அட்டை ஒட்டினது மாதிரி நின்று கேட்டுக் கொண்டேயிருந்தான்.

'வேலை, சம்பளம் பற்றி பிறகு பேசுவம்' என்று மூன்றாவது தடவையாக உறுதியளித்தான் பத்திறோன்.

அவனின் அக்கா. தங்கச்சி, அவனுடைய ஆச்சி, அப்பு எல்லோரது வாழ்வும் கண்முன் நின்றன. அவை அவனைத் தடுத்தன. கண்ணன் தன்னுள் எழுந்த தன்மான உணர்வை அடமானமாக வைத்துவிட்டு பல்லைக் கடித்துக் கொண்டு வேலையில் இறங்கினான் கொஞ்ச நாளைக்கு என்று அவன் தனக்குள் பல தடவைகள் சொல்லிக் கொண்டான். இன்று விம்மலும் கலந்து கொண்டது. குசினியரோடு சேர்ந்து உதவி செய்தான் ஆனால் குசினியர் தனது நேரத்துக்குப் போய்விட்டான். இரவு பன்னிரண்டு மணிபோல, ஊரில சாமக் கோழி கூவுகிற நேரம் கண்ணன் றூமை நோக்கிப் போனான்.

அவனது நண்பர்கள் அந்த சிறிய றூமில் கிழங்கடுக்கியது போல படுத்திருந்தார்கள். களைப்பு, துயர், எல்லாவற்றுக்கும் மருந்தாக என நினைத்துக் கொண்டு விஸ்கி குடித்தான். அதுவும் அவனை மெல்ல.. மெல்ல... எழுந்து றூமின் சன்னலைத் திறந்து வைத்தான். காற்று ஊமையாய் இருந்தது. ஆள் அரவமற்று இருந்தது வீதியில் மரங்கள் எல்லாம் இலை உதிர்த்தி வெறுமையாக நின்றதை அந்த மரங்கள் உதிர்த்திய தங்க நிற இலைகளின் வாசனை. அழகு. அது சூரிய ஒளியில் பட்டு ஜொலித்த ஜொலிப்பு அது காற்றில் கலந்தொலித்த நாதம் எல்லாம் வெண்பனிக்குள் அகப்பட்டு அழிந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். அவன் நாளைப் பொழுது பற்றிய எக்கம். கவலை. வேலை அலுப்பு. சோர்வு இத்தியாதி துன்பங்கள் அவனது இமைகளை மூட வைத்தன ■

தமிழீழ ஆவணக் காப்பகம்





# கேள்வி - பதில்

திரு. கிட்டு

(தமிழக ஆட்சி கலைக்கப்படுவதற்குமுன் எழுதி அனுப்பப்பட்ட கேள்வி.)

* தமிழ்நாட்டில் புலிகளினால் சட்டமும், ஒழுங்கும் குலைந்துவிட்டதாகவும், அதற்குக் காரணம் தி.மு.க அரசுதான் என்றும் காங்கிரசும், அ.திமு.க வும் மற்றும் ஒருசில கட்சிகளும் வரிந்து கட்டிக்கொண்டு தி.மு.க அரசை "டிஸ்மிஸ்" செய்யவேண்டும் என்று மத்திய அரசை தெல்லூட்டி வருகின்றனவே! தமிழ் நாட்டில் புலிகளின் உண்மைநிலை என்ன?

எஸ்.ஐ.ஜெகதீசன்
PANTIN

தமிழ்நாட்டில் தி.மு.க அரசு புலிகளுக்கு உதவுவதாக காரணம் காட்டி தி.மு.க வின் ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. விடுதலைப் புலிகள் உல்பா தீவிரவாதிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும், இந்தியாவில் உள்ள தீவிரவாதக் குழுக்களுக்கு விடுதலைப் புலிகளே ஆயுதங்கள் வழங்கி வருவதாக காரணம் காட்டியும், மேலும் விடுதலைப் புலிகளால் தமிழ் நாட்டில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்து விட்டதாக காரணம் காட்டியும் இவ் ஆட்சிக்கலைப்பு நடைபெற்றுள்ளது. உண்மையில் முழுக்க முழுக்க இச்சம்பவங்கள் உள்நாட்டு அரசியல் பிரச்சனையே தவிர வேறொன்றும் இல்லை.

உள்நாட்டுக் கட்சிகளின் குடும்பிப்பிடிச் சண்டையில் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டம் சீரழிக்கப்படுகின்றது. விடுதலைப் புலிகளுக்கும் இந்திய மண்ணின் எந்த தீவிரவாதக் குழுவுக்கும் தொடர்பில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்தவிடயம். அதுமட்டுமல்ல, வடக்கே உள்ள இந்திய மாநிலங்களுடன் ஒப்பிடும்போது தமிழ்நாடு அமைதியாகவே இருக்கின்றது. சட்டமும், ஒழுங்கும் சிறந்த முறையில் பேணப்பட்டே வருகின்றது. விடுதலைப் புலிகளால் சட்டம் ஒழுங்குக்கு இடையூறு விளைந்திருக்கின்றது என்பது நிச்சயமாக உண்மையல்ல. ஆனால் இவ் ஆட்சியானது மக்களால் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட ஆட்சி. தமிழ் நாட்டில் நான்காவது தடவையாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனநாயக ஆட்சி சில சுயநல நோக்குக்காக கலைக்கப்படுகின்றது.

இத்தகைய ஜனநாயக விரோதப் போக்குகளால் எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் ஓர் புரட்சி வெடித்தால் அது ஆச்சரியத்தை ஏற்படுத்தாது. அமைதியாக இருக்கின்ற மக்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதில் அர்த்தமில்லை. பல தேசிய இனங்களை உள்ளடக்கிய பாரதநாட்டை வழிநடத்த ஓர் முதிர்ச்சி மிக்க தலைமை வேண்டும்; பரந்த பார்வையையும், பரந்த எண்ணங்களையும் கொண்ட ஒரு தலைவர் இந்தியாவுக்கு வேண்டும்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை இந்தியாவின் உள்நாட்டு அரசியல் பிரச்சனையில் ஒருபோதும் தலையிட்டதுமில்லை, தலையிடப் போவதுமில்லை.

* சிறீலங்கா அரசுடன் இணைந்து செயல்ப்படும் துரோகக் குழுக்களின் செயல்ப்பாடுகளில் திருப்தி இன்றேல் அவர்கள் தூக்கியெறியப்படுவார்கள் என்று அமைச்சர் ரஞ்சன் விஜயரெட்னா கூறிய பின்னரும், துரோகக் குழுவினர் வெட்கம், மானம், ரோசம், சூடு, சொரணை இன்றித் தொடர்ந்து செயல்ப்படுகின்றனரே! வளர்ப்பவர்களாலேயே அவர்கள் அழிக்கப்படவிருப்பதை அமைச்சர் முன்கூட்டியே சூசகமாகத் தெரிவித்துள்ளதை துரோகக் குழுவினர் இன்னும் உணர்ந்த பாடாக இல்லையே! இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

எஸ்.ஐ.ஜெகதீசன்
PANTIN.

ஓர் காலத்தில் இக் குழுக்களெல்லாம் தமிழீழ விடுதலைக்காக போராடப் புறப்பட்டன. ஆனால் நீண்டகாலப் போக்கில் தமிழீழ விடுதலையை எடுத்துச் செல்லக்கூடிய திறமையும், தெளிவான திட்டங்களும் இவைகளிடம் இருக்கவில்லை; தீர்க்கதரிசனமும், அக புற அழுத்தங்களை எதிர்த்து எமது மக்களின் விடுதலையை முன்னெடுக்கக்கூடிய தலைமைகளையும் இக் குழுக்கள் கொண்டிருக்கவில்லை. அதனால் காலப்போக்கில்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



இக் குழுக்களே எமது மக்களின் விடுதலைக்கு எதிராகப் பாவிக்கப்பட்டுவரும் ஓர் நிலை உருவாகிவிட்டது. அற்ப ஆசைகளுக்கும், மோகத்துக்கும் பலியாகி, தவறான வழிநடத்தல்களைப் பின்பற்றும் தலைவர்களால் இக்குழுக்களில் ஏராளமான தமிழ் இளைஞர்கள் பலியிடப்படுகின்றனர். இந்நிகழ்வுகள் வேதனைக்குரியவை. விடுதலைப் புலிகள் இப்போதும் அனைத்து அமைப்புக்களில் இருக்கும் இளைஞர்களை தமிழீழத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்து வருகின்றனர். அதற்கு பயனும் இருக்கத்தான் செய்கிறது. பல இளைஞர்கள் தமிழீழத்துக்கு வந்துள்ளனர்.

இக்குழுக்களின் தலைமைகள் இன்று சிறீலங்காவுடன் சேர்ந்து நின்று எமது மக்களுக்கு எதிராகவே செயற்பட்டு வருகின்றனர். ஆனால் சிறீலங்கா அரசால் பாவிக்கப்படும் இவர்கள் சிறீலங்காவாலேயே தூக்கி எறியப்படுவார்கள் என்பதை உலகவரலாறுகள் இவர்களுக்கு எடுத்துக் காட்டினாலும் இவர்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. ஆனால் எமது மக்கள் இவர்களை என்றும் ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை.

* 1) தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் இருந்து வெளியேறும் மக்களிடம் பத்தாயிரம் பணம் பெறப்படுவதாக கூறுகிறார்களே ? அது உண்மையா?
2) இவ்வாறு பணம் செலுத்தி கொழும்புக்கு சென்ற நபர் திரும்பிவந்து மீண்டும் கொழும்புக்கு போகும்போது பணம் செலுத்தவேண்டுமா ?

உதயன்
PARIS.

விடுதலைப் புலிகளினால் தமிழீழ பாதுகாப்பு நிதிக்காக ஒவ்வொரு குடும்பத்திடம் இருந்தும் திருப்பிக் கொடுக்கப்படும் கடன் அடிப்படையில் இரு பவுண் எடையுள்ள தங்கம் வாங்கப்படுகின்றது. பணம் உள்ள சிலர் பவுணுக்கான தொகையான பத்தாயிரம் ரூபாவை செலுத்துகின்றனர். பவுண் கொடுக்கக் கூடிய அடிப்படை வசதி இல்லாதவர்களிடம் விடுதலைப் புலிகள் வசூலிக்கவில்லை.
வெளிநாட்டுக்கோ கொழும்புக்கோ செல்பவர்களிடம் அதற்கென்று பணம் அறவிடப்படுவதில்லை. பவுண் வழங்கியதற்கான பற்றுச்சீட்டு மட்டுமே கேட்கப்படுகின்றது. கொடுக்கக்கூடிய வசதிபடைத்தவர்களிடம் மட்டுமே இப் பவுண் வசூலிப்பு பெறப்படுகின்றது.
கொழும்பு செல்வதற்கு எவ்வித பணமும் வசூலிக்கப் படுவதில்லை என்பதை திடமாக கூறமுடியும். எமது இனத்தின் விடுதலைக்காக எமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு ஒரு கடனுதவியாகவே இப் பவுண் வசூலிப்பு செய்யப்படுகின்றது. இருதடவைகள் 100 பேர் வீதம் இப்பவுண்கள் திருப்பி ஒப்படைக்கப் பட்டுள்ளன. அதன் பின் மக்கள் நம்பிக்கையுடன் பணம் கொடுப்பதில் ஈடுபட்டு வருகின்றனர்.

* கடந்த ஒருசில வருடங்களுக்குள் J.V.P யினர் என்ற சந்தேகத்தின் பேரில் தென்னிலங்கையில் 60000 க்கும் மேற்பட்ட சிங்கள மக்கள் பிரேமதாசா அரசால் படுகொலை செய்யப்பட்டனர். சிங்கள அரசால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் இராணுவப் பயங்கர வாதங்களுக்கு எதிராக தொடர்ந்து போராடும் விடுதலைப் புலிகள் இந்த மனித நாகரீகமற்ற செயலை ஏன் கண்டிக்கவில்லை? J.V.P, மற்றும் இடதுசாரக் கொள்கையுடைய ஏனைய சிங்கள இயக்கங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன?

பொ.துரை
MAIRIE D'ISSY.

சிங்கள மக்கள் மீது பிரேமதாசா அரசின் பயங்கரவாத நடவடிக்கையை கண்டித்து அன்னையர் முன்னணி 19.02.1991 அன்று ஊர்வலம் ஒன்றை நடாத்தியது. இவ்வூர்வலத்தைக் கலைக்க முயன்ற சிறீலங்கா அரசு விடுதலைப் புலிகள் அவ்வூர்வலத்தைக் கலைக்க கொழும்பில் குண்டு வைக்கப்போவதாக புரளியைக் கிளப்பியது. உடனடியாகவே விடுதலைப் புலிகள் அதை மறுத்து அறிக்கை விட்டதுடன், அன்னையர் முன்னணிக்கு முழு ஆதரவு வழங்குவதாகவும் அவ்வறிக்கையின் வாயிலாகத் தெரியப்படுத்தியுமுள்ளனர். ஆனால் J.V.P ஐ பொறுத்தவரை இதுவரையும் அவர்கள் தமது அரசியல் கொள்கையையோ அல்லது இலட்சியத்தையோ சரியாக வெளியிடவில்லை, அதைவிட தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் சம்பந்தமாகவும் தமது நிலைப்பாட்டை தெளிவாக வரையறுக்கவில்லை, மேலெழுந்த வாரியாக தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களை சிங்கள இடது சாரிகள் கண்டித்தாலும் தமிழ் மக்களுக்கான உரிமைப் பிரச்சனையில் அவர்களுடைய தீர்வு என்ன? இதுவரைக்கும் இதற்குப் பதில் கிடைக்கவில்லை.

தமிழ்மக்களை ஓர் தேசிய இனம் என்பதையும், அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை இருப்பதையும் மறுக்கும் சிங்கள இடதுசாரிகள் என்று கூறிக்கொள்பவர்கள் உண்மையில் இனவாதிகளே.

40 வருடகாலம் தமிழர்களின் மனித உரிமைகள் மீறப்படுகின்றது. இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து திட்டமிட்ட இனப்படுகொலை நடவடிக்கை தமிழர்கள் மீது நடாத்தப்பட்டு வருகின்றது; எமது மக்களும், மண்ணும் அழிக்கப்பட்டுவருகின்றது. இதற்கு இந்த இடதுசாரிகள் கூறும் பதில் என்ன?

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


ஜெனீவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கமிஷனின் கூட்டத் தொடரில் "விடுதலை" என்ற அரசசார்பற்ற நிறுவனத்தின் சார்பில் தமிழர் சம்மேளனத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.
மக்களின் சுயநிர்ணய உரிமை என்ற விடயத்தின் கீழ் 31.01.1991இல் இச் சம்மேளனத்தின் பெண் பிரதிநிதி ஒருவரால் வாசிக்கப்பட்ட அறிக்கையை முழுமையாகத் தருகின்றோம்.

*ஐ. நா மனித உரிமை ஆணைக்குழு,*
*47 வது கூட்டத்தொடர்,*
*9 வது நிகழ்ச்சி*
*பெப். 1991.*

## *ஸ்ரீ லங்காவில் உள்ள தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை*
*{அரசசார்பற்ற நிறுவனங்களின் (விடுதலை) அறிக்கை.}*

*தலைவர்,*
*ஸ்ரீ லங்காவில் அதிவேகமாக சீரழிந்துவரும் தமிழ்மக்களின் மனித உரிமைகளைக் குறித்து நாம் மிகுந்த கரிசனை கொண்டுள்ளோம்.*

*உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகளை ஸ்ரீ லங்காவில் உள்ள சகல கட்சிகளும், அமைப்புக்களும், மதித்து நடக்க வேண்டுமென்று 1987 ம் ஆண்டு மார்ச் மாதம் நடந்த ஆணைக்குழு கேட்டுக்கொண்டதுமல்லாமல், சர்வதேச மனித உரிமைச்சட்டங்களை மேம்படுத்தி முதற்படுத்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் ஒத்துழைக்குமாறு ஸ்ரீ லங்கா அரசையும் கேட்டுக் கொண்டது.*

*ஆனால் 4 வருடங்களின் பின்னர் ஆயுத முரண்பாடு மிகவும் பயங்கரமாக வளர்ந்துள்ளதுடன், ஸ்ரீ லங்காவின் அதிகாரிகள் சர்வதேச மனித உரிமைச்சட்டங்களை தொடர்ந்தும் மீறி வருகின்றனர்.*

*11 ம் திகதி யூலை மாதம் 1990 ல் ஆரம்பித்த ஆயுதமோதலில் வடகிழக்கில் உள்ள தமிழ் மக்கள் 6000 க்கு மேற்பட்டோர் ஸ்ரீ லங்கா அரசால் கொலை செய்யப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் 4000 க்கு மேற்பட்டோர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் அரைவாசிப்பேர், அரசினால் உண்டாக்கப்பட்ட முஸ்லீம் ஊர்காவற் படையினால் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஸ்ரீ லங்கா அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்ட நூற்றுக்குமதிகமானோர் காணாமல் போயுள்ளனர். ஒருசிலர் பின்னர் இறந்து கிடக்கக் காணப்பட்டனர். அகதிமுகாம்கள் கூட இராணுவத்தின் இலக்குகளாக மாறியுள்ளன. பொதுமக்களின் வதிவிடங்கள் மீது தொடர்ச்சியான குண்டுவீச்சுத் தாக்குதல்களினாலும், நீதியற்ற கொலைகளினாலும் பத்து இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் தங்கள் சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர். இரண்டு இலட்சத்திற் கும் அதிகமானோர் தென்இந்தியாவிற்கு அகதிகளாய் சென்றுள்ளனர்.*

*சர்வதேச பத்திரிகைகள் நிதர்சனத்தில் பாதிக்கப்பட்டட வடக்கு கிழக்குடன் தொடர்பு கொள்ளாதவாறு தடுக்கப்பட்டுள்ளன. எப்படியிருப்பினும் தென் இலங்கைக்கு சென்ற ஐரோப்பிய பாராளுமன்ற ஆய்வுக்குழு கடந்த 18 மாதத்தில் 60000 பேர் அளவில் சிங்கள மக்கள் கொலைசெய்யப்பட்டுள்ளனர் எனக் கூறியுள்ளனர். இது வடகிழக்கில் இருக்கும் இராணுவத்தின் திட்டமிட்ட பயங்கர நடவடிக்கைகளின் அளவுகளை அறிந்து கொள்ள ஏதுவாகும்.*

*ஸ்ரீ லங்கா அரசு விடுதலைப் புலிகள் அறிவித்திருந்த போர்நிறுத்தத்தை உதறித்தள்ளி, போர்நிறுத்த பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான திட்டங்களை முன்வையாமை, தமிழ் மக்கள் மீது இனப்படுகொலையை தொடர்வதற்கு என்பதை உங்களுக்கு அவதானத்துடன் முன்வைக்கிறோம்.*

*இது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை 26.09.1990 இலிருந்து 3 மாதங்களிற்கு உலகளாவிய ரீதியில் செய்த ஸ்ரீ லங்காவின் பிரச்சாரத்தை முன்வைக்கிறோம். நான்கு தசாப்தங்களாக ஸ்ரீ லங்கா அரசினால் திட்டமிட்டு நடாத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள், சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை வெறும் விபத்து நிகழ்வுகள் அல்ல. ஒரே ஒரு பௌத்த சிங்கள ஸ்ரீ லங்கா என்ற கோட்பாட்டு அடிப்படையின் கீழ் அங்குள்ள தமிழ்மக்*

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



களை பூண்டோடு அழிக்க திடமாக செயற்பட்டு வருகின்றனர். தமிழ்மக்கள் தமது மனித உரிமைகளைப் பெற போதுமான அளவு கஸ்டப்பட்டுள்ளனர், நீண்டகாலமாக காத்துள்ளனர். இன்று தமது சுய நிர்ணய உரிமை மறுக்கப்பட முடியாத மக்களாக அவர்கள் உள்ளனர்.

"ஒடுக்கப்படும் சிறுபான்மை இனங்களின் பாதுகாப்பு" குறித்து டாக்கடர் கெக்டர் குரோஸ் எஸ்பியல் 1980ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் உப ஆணைக்குழுவிற்கு சமர்பித்த அறிக்கையை, இங்கு கவனத்திற் கொள்ளு வோம்.

எந்தவகையிலும், எந்தவிதமான காலனித்துவ அல்லது வேற்றாதிக்கத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு. பிரச்சனைக்குரிய மக்கள் மீது காலனித்துவ அல்லது வேற்றாதிக்க நிலை இருப்பதற்கான சாட்சியங்கள் உள்ளபோது இந்த உரிமையை அளிப்பதற்கு ஒரு இன மக்களிலிருந்து இன்னொருவருக்கு எந்த வகையான வித்தியாசமும் இருக்கமுடியாது.

இனப்படுகொலைக்கெதிரான சர்வதேச நடவடிக்கை குறித்து 1982 ம் ஆண்டு பேராசிரியர் லியோகுறுப்பர் அளித்த அறிக்கையில் உள்ள பின்குறிப்பை கவனத்திற்கொள்ளுமாறு ஆணைக்குழுவை கேட்டுக்கொள்ளுகின் றோம்.

இனப்படுகொலை மனித இனத்தின் மீது தொடரும் ஓர் வெறுக்கத்தக்க தண்டனை. இன்றும் உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய இனப்படுகொலைகள் நடக்கின்றன. ஸ்ரீ லங்காவில் இடம்பெறும் இனக்கொலைகள் சிலபடுகொலைகள் மேலதிக சுயாட்சி கோரும் போராட்டங்களால் இவை நிகழ்கின்றன. சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலம் இவற்றைத் தீர்த்துக் கொள்ளலாம்.

தமிழீழ மக்களின் மனித உரிமை சுயநிர்ணய உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் திட்டத்தின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த முன்னெடுப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, இந்தப்பிரச்ச னைக்கு ஓர் அரசியல் தீர்வை காணவிளையுமாறு ஸ்ரீ லங்கா அரசு உடனடியாக கேட்டுக்கொள்ளப்படவேண் டும் என்று வலியுறுத்துகிறோம்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக்குழு ஸ்ரீ லங்காவின் வடக்கு கிழக்கில் மீறப்படும் மனித உரிமைகளை ஆராய்வதற்கு ஒரு ஆய்வுக்குழுவை அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். இத்தகைய ஓர் நடவடிக்கை ஸ்ரீ லங்காவில் மீறப்படும் மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்தவும், பிரச்சனையில் சம்பந்தப்பட்டவர்களை சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகளை மதித்து நடக்கவும் வழிவகுக்கும். ■

நன்றி

**உங்களின் கவனத்திற்கு...**

கருத்தோட்டமுள்ள, ஆரோக்கியமான கதைகள், கட்டுரைகள், கவிதைகள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

உங்கள் ஆக்கங்கள் ஆசிரியர் குழுவின் ஆய்விற்கும், தேவை ஏற்படின் திருத்தத்திற்கும் உட்படுத்தப்படும்.

"கேள்வி பதில்" பகுதிக்கான கேள்விகள் மாதத்தின் நடுப்பகுதிக்குமுன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

"எரிமலை" இதழ் தொடர்பான உங்களது ஆக்கபூர்வமான விமர்சனங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

* உங்கள் பத்திரிகையை நெறிப்படுத்தவேண்டிய கடமை உங்களதே. *

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# கடலும் அதன் வளங்களும்

கட்டுரைத் தொடர் - 1

நாம் வாழும் பூமிக்கிரகத்தில் இன்று பல நெருக்கடிகள் தோன்றியுள்ளன. பெருகிவரும் மக்கள் தொகையும் அவர்களின் அளவற்றதேவைகளுமே இவற்றிற்கு முக்கியகாரணங்களாகும். இத்தகைய தேவைகளுக்கு ஆகவேண்டிய பொருட்களை நாம் பூமியின் நிலப்பரப்பில் இருந்துதான் கூடுதலாக பெறுகிறோம் ஆனால் நிலப்பரப்பானது பூமியின் மேற்பரப்பில் 29%மும் மிகுதி 71% நீரினாலும் கொள்ளப்பட்டுள்ளது. கடலிலிருந்து எமக்குத்தேவையான உணவுப்பொருட்களுக்கு மீன்வகைகளைப் பெற்றுக் கொள்கிறோம். மற்றைய கனிப்பொருட்களில் எரி பொருட்களை மட்டும் கரையோரப் பகுதிகளை அண்டிய கடல் பிரதேசத்தில் இருந்து பெற்றுக்கொள் கிறோம். கனிப்பொருட்களைப் பொறுத்தமட்டில் நிலப்பரப்பில் உள்ளவற்றைவிட பலமடங்குகள் அதிகமாக நீர்ப்பரப்பில் உள்ளன. இதனால் கடலிலிருந்து இவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு பலவகைகளிலும் விஞ்ஞான ஆய்வுகள் நிகழ்த்தப்படுகின்றன.

உண்மையில் கடலினால் நாம் பெறக்கூடிய பயன்கள் பல உள்ளன. இப்பயன்களை ஒவ்வொரு தனிமனிதர்களும், நாடுகளும் அவற்றை எவ்வளவு வீதம் பயன் படுத்துகின்றனர் என்பதைப் பொறுத்தே அவர்கள் பெறும் லாபங்களும் தங்கியுள்ளன. அதேவேளை கடலானது பூமியின் சுவாத்தியத்தைப் பாதுகாப்பதில் இயற்கையாக செயல்படுகின்றது. மேலும் கைத்தொழில் நாடுகளில் இருந்து வெளியேற்றப்படும் கைத் தொழில் கழிவுப் பொருட்கள் கடலிற்கு பெரும் அழிவைக் கொடுக்கின்றன. அதனால் கடலில் வாழும் உயிரினங்கள் அந்தந்த பிரதேசங்களில் முற்றாக அழிந்து போகும் நிலையில் உள்ளன. இதனால் கடலிலிருந்து நன்மையைப் பெறும், பெறப்போகும் நாங்கள் அதன் சூழலைப் பாதுகாக்கவேண்டிய அவசியத்துக்குள்ளாகிறோம்.

கடற்கரையை அண்டியுள்ள நாடுகளிற்கு அவற்றின் கரையோரங்களிலிருந்து 12 மைல் தூரத்திற்குள்ள பிரதேசங்கள் அந்தந்த நாடுகளுக்குச் சொந்தமானவையாகும். தமிழீழத்தின் நிலப்பரப்பு சுமார் 8000 சதுரமைல் பிரதேசமாயிருக்க அதன் கடற்பிரதேசம் சுமார் 5000 சதுரமைலைக் கொண்டுள்ளது. இதனால் நாம் கடலிலிருந்து பெறக்கூடியவற்றை பெற்றுக் கொள்வதிலும், கடலைப் பாதுகாப்பதிலும், முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

நாம் கடலைப் பற்றியும் அதிலிருந்து பெறக்கூடிய பயன்களைப்பற்றியும், ஓரளவேனும் தெளிவாகத் தெரிந்து கொள்வது அவசியம். பூமியில் கடல் எவ்வாறு தோன்றியது என்பதை முதலில் நாம் தெளிவாகத் தெரிந்த கொள்ளவேண்டும். பூமி எவ்வாறு தோன்றியது என்பதையும், அதில் எத்தகைய மாற்றங்கள் உண்டாகின என்பதையும் தொடர்ந்து என்ன மாற்றங்கள் நடக்கலாம் என்பதையும் நாம் தெரிந்து வைப்போமேயானால் நாம் விழிப்புணர்வுள்ளவர்களாக செயற்பட்டு ஆகவேண்டியதை செய்துகொள்ளலாம்.

விண்கற்கள் மோதி ஒன்று சேர்ந்துதான் பூமியும் சூரிய குடும்பத்தில் உள்ள மற்றய கிரகங்களும் உண்டாகின. வேகமாகச் சென்றுகொண்டிருந்த விண்கற்கள் மோதி சேர்ந்தபோது கூடிய அளவு வெப்பசக்தி தோன்றியது. இந்த வெப்பத்தில் அவை உருகி அதிலிருந்து பல இரசாயன சேர்க்கைகள் ஆவியாகின. இவ்வாறு ஆவியான இரசாயன சேர்க்கைகளே முதலில் பூமியின் வளிமண்டலத்தில் நிறைந்திருந்தன. சுமார் 450 கோடி வருடங்களின் முன்னர் பூமி தோன்றிய போது அதன் வளிமண்டலம் சுமார் 500 கிமீ தூரத்திற்கும் அவ்வளிமண்டலத்தில் நீராவியும் மற்றய வாயுக்களும், மற்றய இராசாயன சேர்க்கைகளின் ஆவிகளும் நிறைந்திருந்தன. இவற்றின் வெப்பநிலையும் அதிகூடியதாக இருந்தது. அதேவேளை பூமியின் மேற்பரப்பின் வெப்பநிலையும் அதிகூடியதாக இருந்

www.tamileelamarchive.com

ததுடன் பூமி ஓர் எரிகுழம்பாக இருந்தது. காலங்கள் செல்லச் செல்ல வளிமண்டலம் குளிர்ந்து மழையாக பூமியின் மேற்பரப்பை அடைந்த இது சூடாகின மேற் பரப்பில் பட்டு மீண்டும் ஆவியாகி வளிமண்டலத்தை அடைந்தது. இந்த மாற்றம் மீண்டும் மீண்டும் பல முறை நிகழ்ந்தது. இந்த மாற்றம் பலகோடி வருடங் களுக்கு நிகழ்ந்தது. முதலில் பூமியின் மேற்பரப்பில் தோன்றிய நீர்த்தேக்கம் ஓர் குழம்பாகவே இருந்தது. இது மேலும் மேலும் பெருகி பெரும் சமுத்திரமாக மாறியது. இன்றும் தொடர்ந்தும் பூமியில் கடலில் நீர்மட்டம் உயர்ந்து கொண்டே செல்கின்றது.

கடலில் இருந்து நாம் எடுக்கக் கூடிய பயன்களை நான்கு வகையாக காணலாம்.

*1. கடல் நீர்*

கடல் நீரில் உள்ள இரசாயனப் பொருட்களை பிரித் தெடுத்து நமது தேவைக்கு உபயோகிக்கலாம்.

உ +ம் உப்பு : கடல் உப்பிலிருந்து பல இரசாயனப் பொருட்கள் பிரித்தெடுக்கப்பட்டு பல தேவைகளுக்கு பாவிக்கப்படுகின்றது. தமிழீழத்தில் பரந்தனில் உள்ள இரசாயனக்கூட்டுத் தாபனம் இத்தொழிலினைச் செய்கின்றது.

**குடிநீர்**: கடல் நீரிலிருந்து நன்நீரைப் பிரித்தெடுத்து குடிநீராகப் பாவிக்கலாம்.

மின்சக்தியை பெற்றுக் கொள்ளலாம்.

**2. கடல் நீரில் வாழும் உயிரினங்கள்.**

மீன் வகைகள் இன்று மனிதருடைய உணவிற்காக வும், மற்றைய பறவை, மிருகங்களின் உணவிற்காகவும் பிடிக்கப்படுகின்றன.

**3. கடல் நீரின் கீழ் உள்ள நிலப்பரப்பு.**

ஆழம் குறைந்த இந்த நிலப்பரப்பில் நீர்த் தாவரங்க ளைப் பயிரிட்டு, அவற்றை உணவிற்கும், மருந்து வகைகளுக்கும் பாவிக்கலாம்.

நிலப்பரப்பின் கீழ் உள்ள கனிப் பொருட்களை பகுத் தெடுத்து மற்றைய தேவைகட்குப் பாவிக்கலாம் ■

தொடரும்......

## குறும்பு

"ஐக்கிய தேசியக் கட்சியுடனோ, சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடனோ இணைந்து விட்டுக் கொடுத்து பேச்சுவார்த்தைகளை நடத்துவதன் மூலம்தான் இலங்கையில் இனிமேல் தமிழர்கள் நிம்மதியாக வாழமுடியும்."

திகாமடுவல்ல M.P - திவ்வியநாதன் (T.E.L.O.)
(வீரகேசரி03.02.1991)

தமிழ் மக்களது அரசியல் வரலாற்றில், மூத்த தலைமுறையினரில் ஒருவரான திரு.வி.என்.நவரத்தினம் கனடாவில் காலமான செய்தி கேட்டு கவலை அடைவதாக மட்டக்களப்பு M.P. ஜோசப் பரராஜசிங்கம் (T.U.L.F.) அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

வீரகேசரி 03.02.1991.

வளைகுடாப் போரின் காரணமாக இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜிவ் காந்தி விமானங்களில் பயணம் செய்வதில்லை என முடிவு செய்திருக்கிறார். பெட்ரோலை மிச்சப்படுத்துவதற்காக ராஜிவ் காந்தி ரயில் மூலமாகவே பல்வேறு மாநிலங்களுக்கும் பயணம் செய்ய முடிவு எடுத்திருக்கிறாராம்.

பிப்பிரவரி - இந்தியா டுடே.
(இதே ராஜிவ் காந்தி பதவியில் இருந்த காலத்தில், 1987இல் கனடாவிற்கு விஜயம் செய்து அரசியல் விடயமாக சில நாட்கள் தங்கியிருந்த ராஜிவ் காந்திக்கு விசேட விமானத்தில் பால் பாயாசம் கொண்டு செல்லப்பட்டது என்பது நினைவுகூரத்தக்கது.)

"விடுதலைப் புலிகளை இன்னும் ஆறு மாதத்திற்குள் முற்றாக அழித்துவிடுவோம். அதற்கான நடவடிக்கையில் படையினர் இறங்கியுள்ளனர்."

-ரஞ்சன் விஜயரெட்னா- ஜனவரி1991

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ஸ்ரீ லங்கா இராணுவம் என்ற மண்குதிரையை நம்பி
சர்வாதிகாரியாக மாறிவரும் பிரேமதாசா

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





www.tamileelamarchive.com